# விடுதலைப்புலிகள்

குரல் : 50 | ஆனி - ஆடி 1994 | அன்பளிப்பு: ரூபா : 5-


# சிறீலங்கா அரச பீடத்தில் நிலையான ஆட்சி ஏற்படுமா?

**17 ஆண்டுகளாக சிங்களதேசத்தை ஆட்சிசெய்துவரும் ஐ. தே. கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருமா என்பது, இன்று கேள்விக்குறியாகியுள்ளது. தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கி நாட்டைச் சீரழித்துவந்த ஐ. தே. கட்சியை, சிங்கள மக்கள் மீண்டும் பதவியில் அமர்த்த விரும்பமாட்டார்கள் என்று, அரசியல் அவதானிகள் ஆரூடம் கூறியுள்ளனர்.**

**அதேவேளை, நிலையான அரசை அமைக்கும் அளவுக்கு சுதந்திரக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றும் என்பது சந்தேகமாகவே இருக்கும் எனவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.**

இவ்விதம் இரு பிரதான கட்சிகளுள் ஏதாவது ஒன்று ஒரு உறுதியான அரசை அமைக்கமுடியாமல் போகும் சூழல் உருவாவதற்குப் பிரதான காரணம், தமிழ் -முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்த இரு கட்சிகளும் தெளிவான - உருப்படியான நிலைப்பாட்டை எடுக்காமல் விட்டதால், தமிழ் - முஸ்லிம் மக்களது வாக்குகளைப் பெறமுடியாத சூழல் எழுந்துள்ளதுதான் என்று கருதப்படுகிறது.

இரு கட்சிகளும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையான தமிழர் தாயகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. வட - கிழக்கு இணைந்த ஒரு மாநில சுயாட்சித் திட்டத்தை முன்வைக்க, இரு கட்சிகளும் தயாராக இல்லை.

ஆனால் வட - கிழக்கில் ஒரு போலித் தேர்தல் நாடகத்தை அரங்கேற்றி, தமிழர் விரோதக் குழுக்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கி அவர்களது ஆதரவைப் பெற, ஐ. தே. கட்சி முயல்கிறது.

அதேசமயம் ஆட்சிக்குவந்தால் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகச் சொல்லும் சுதந்திரக் கட்சியும், தமிழ் மக்கள் தொடர்பாக ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமா என்பதும் சந்தேகத்துக்குரியது.

தமிழ் மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால், சிங்களப் பேரினவாத சக்திகளின் ஆதரவை இழக்கக்கூடும் என, இரு கட்சிகளும் அஞ்சுகின்றன. இந்த அரசியல் யதார்த்தத்துக்குள்ளேயே தேர்தல் நடைபெறுகின்றது.

பூதாகரமாக வளர்ந்து - ஒரு தேசிய நெருக்கடியாக எழுந்துவிட்ட தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சிங்களக் கட்சிகள் முன்வராது போனால், தமிழ் மக்களது ஆதரவைப் பெறுவது சாத்தியமற்றுப்போகும்.

அதனால் ஒரு ஸ்திரமான அரசை நிறுவுவதும் சாத்தியமாகாது என, அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். ○

## உள்ளே


- தேர்தலும் இனப்பிரச்சினையும் – நிலைப்பாடு
- எழுதமுடியாத காவியங்கள் – முகமறியாத கரும்புலிகள் நினைவு
- ஒரு வரலாற்று அபூர்வம் – கட்டுரை
- அடி முடி அறிய முடியாத அற்புதம் – கவியுரை
- பேராசிரியர் துரைராசா – அஞ்சலி
- பூநகரி வெற்றியின் தலைவர்கள் – வீர வணக்கம்
- வரலாறு படைத்த வரலாற்றுத் தாக்குதல் – திருநெல்வேலி நினைவு




அசைவற்றுப்போய் உட்கார்ந்திருக்கிறாயே அம்மா...!
உனது முகத்தில்தான் எவ்வளவு ஏக்கம் தேங்கிக் கிடக்கிறது......
யாரம்மா அவன்...? உன் பிள்ளையா...? பேரனா...? அல்லது யாரோ பெற்ற மைந்தனா...?
எப்படியிருந்தாலும்... எமைப் பிரிந்து அவன் போய்விட்டான்; உனைப் பிரிந்தும்தான் - ஆனால்,
அவனது பாதை தெளிவானது; பயணம் பெறுமதியானது; இலட்சியம் உன்னதமானது.
நிம்மதியாக நீ எழுந்து போ அம்மா.......


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

புலிகளின் குரல்

# தேர்தலும் தமிழர் இனப்பிரச்சினையும்

ஓகஸ்ட் 16ஆம் திகதி சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறும் என்று, அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவேண்டிய கால எல்லையும் அறிவிக்கப்பட்டு, சிங்கள தேசத்தில் தேர்தல் களைகட்டத் தொடங்கிவிட்டது.

பிரதான கட்சிகளான ஐ. தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்றின்மேல் மற்றொன்று குற்றப் பட்டியல்களையும்' அதேவேளை மக்களை நோக்கி வாக்குறுதி வார்த்தைகளையும் அள்ளிவீசிக் கொண்டிருக்கின்றன.

1970 தொடக்கம் 1977 வரையான சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் மக்கள் அனுபவித்த துன்பங்களையும் கஷ்டங்களையும் சிங்கள மக்களுக்கு நினைவூட்டி, அவர்களது வாக்குகளைக் கவர, விஜேதுங்காவும் அவரது கட்சியினரும் முயல்கின்றனர்.

இதேபோல கடந்த 17 வருடகால ஐ.தே. கட்சியின் ஆட்சியில் தலைவிரித்தாடிய ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சிங்கள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றை எடுத்துச் சொல்லி, சிங்கள வாக்காளர்களைத் தம்பக்கம் திசைதிருப்பச் சிறீமாவோ அம்மையாரும் அவரது கட்சியினரும் பிரயத்தனப்படுகின்றனர்.

ஆனால் இந்தத் தீவில் இரத்த ஆறை ஓடச்செய்யும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கை, எந்த ஒரு கட்சியும்– எந்த ஒரு சிங்களத் தலைவனும்– தனது முதன்மையான பணியாக எடுத்துக்கொள்ளவில்லை.

1977ஆம் ஆண்டுக்கு முந்தைய ஏழு வருட 'கியூ' யுகத்தை நினைவூட்டுவதுதான் இந்த நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய அத்தியாவசிய பணி என்பது போல, ஐ. தே. கட்சி செயற்படுகின்றது; 'ஏழு வருட சாபம்' என்ற தலைப்பில், அதற்கே ஐ. தே. கட்சி முக்கியத்துவம் கொடுத்துப் பிரச்சாரம் செய்கின்றது.

அதேபோல ஊழலும்– அதிகார துஷ்பிரயோகமும் – ஜனாதிபதி ஆட்சிமுறையும்தான் இந்தத் தீவைச் சுடுகாடாக்கிக் கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்குப் பிரதான காரணம் என்பதுபோல, சுதந்திரக் கட்சி நடந்துகொள்கிறது.

பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கும், ஆயிரக்கணக்கில் சிங்கள இளைஞர்கள் உயிரிழப்பதற்கும், இந்தப் போரால் இரு தேசிய இனங்கள் மத்தியிலும் தலைதூக்கியுள்ள பல்வேறு சமூக – பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும், இந்த இரண்டு பிரதான கட்சிகளும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை-

இனப்பிரச்சினையைப் பொறுத்தளவில், பிரதான கட்சிகள் இரண்டுமே அதை ஒரு தீண்டத்தகாத விடயத்தைப் போலவே நோக்கித் தூரவைத்துள்ளன.

தமிழினத்தின் உரிமைகளை எவ்வளவுக்கெவ்வளவு பறித்து சிங்களப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்த முடியுமோ அவ்விதம் செயற்படுவதும், அதேவேளை தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நரி மூளையுடன் நசிந்து நசிந்து அறிக்கைகள் விடுவதிலும், இரண்டு கட்சிகளும் தங்களது திறமைகளைக் காட்டுகின்றன.

"இனப்பிரச்சினை இங்கில்லை; இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான். அதை இராணுவ வழிமுறைமூலமே தீர்க்க முடியும் - தீர்க்கவேண்டும்" என்று வாய்கிழியக் கத்திக்கொண்டிருந்த டி. பி. விஜேதுங்கா இப்போது சுருதியை சிறிது மாற்றி, "இது பயங்கரவாதப் பிரச்சினைதான்; ஆனால் அரசியல் வழிமூலம்தான் தீர்க்கவேண்டும்" என்று கூறி, சிங்களப் பேரினவாதத்தையும் 'தாஜா' பண்ணித் தமிழரின் வாக்குகளுக்கும் "உண்டியல்" குலுக்குகின்றார்.

"இதேவேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வு தம்மிடம்தான் உண்டு; மிக விரைவில் அதை வெளியிடுவோம்" என்று, 'குடுகுடுப்பைக்காரன்' கூறுவது போலச் சொல்லிக்கொண்டு தமிழர்களைத் தம்பக்கம் ஈர்க்கமுனையும் சுதந்திரக் கட்சி, வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க விடமாட்டோம் என்றும் வலியுறுத்திக் கூறி, பேரினவாதத்திற்கும் 'சலாம்' போட்டுள்ளது.

"......இவ்வளவு காலமும் எல். ரி. ரி. ஈ. தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை; ஆனால் அரசு பேச்சுக்குத் தயாராகக் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றது......" என்றும் டி பி. விஜேதுங்கா இப்போது கூறிக்கொண்டு திரிகின்றார்.

அப்படியாயின் புலிகள் தரப்பிலிருந்து உலகம் அறிய அரசுக்கு விடுக்கப்பட்ட சமாதான சமிக்ஞைகள், ஏன் டி. பியின் திறந்த கதவுக்கூடாகச் செல்லாதுவிட்டன! சமாதானத்தை நிலைநாட்டும் நல்லெண்ணத்துடன் யாழ்ப்பாணம் வந்து, அந்த முயற்சியில் புலிகளின் ஆதரவையும் பெற்று நம்பிக்கையுடன் கொழும்பு திரும்பிய அந்த நல்லெண்ணக் குழுக்கள், ஏன் டி. பி. திறந்து வைத்திருந்த கதவுகளுக்கூடாக உட்செல்ல முடியவில்லை?

சமாதானக் கதவுகளை டி. பி. விஜேதுங்கா திறந்துவைத்துவிட்டுக் காத்திருந்தாரா அல்லது மூடிவிட்டுத் தூங்குகின்றாரா என்பதல்ல பிரச்சினை; அந்தக் கதவுகளுக்கூடாகச் செல்ல அவர் எவரையுமே அனுமதிக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றைப் புலிகள் இயக்கம் முன்வைக்கவில்லை என்று, எவரும் புலிகளைக் குற்றம்சாட்ட முடியாது. ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் தமிழர் தரப்பிலிருந்து எத்தனையோ தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன; அவற்றிற்கு என்ன நடந்தது? அதன் விளைவாகத்தான் ஆயுதப் போராட்டமும் தனிநாட்டுக் கோரிக்கையும் எழுந்தன.

இனப்பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படவேண்டுமாயின், தமிழ் இனம் சுதந்திரமாக - பாதுகாப்பாக - கௌரவமாக வாழவேண்டுமாயின், தனிநாடுதான் – தமிழீழம்தான் - ஒரேயொரு தீர்வு என்பது புலிகளின் நிலைப்பாடு. இது உலகிற்கே தெரியும்.

தனிநாடு உருவாவதை ஏற்கமுடியாது என்று சிங்கள அரசு கருதினால், மாற்றுத் திட்டமொன்றை முன்வைத்து, அதைப் பரிசீலிக்கும்படி புலிகளிடம் கூறவேண்டியதும் அதற்கான பேச்சுக்களைத் தொடங்க வேண்டியதும் அரசின் கடமை.

ஆனாலும் சர்வதேச உலகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, "சமஷ்டி அமைப்பை அரசு முன்வைத்தால் அதைப் பரிசீலனை செய்ய நாம் தயார்" எனத் தலைவர் அறிவித்திருந்ததும், இங்கு குறிப்பிடத்தக்கது.

"17 வருட காலமாக ஆட்சிபீடத்தில் இருக்கும் ஐ. தே. கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எந்த ஒரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை" என்று, சிறீமாவோ அம்மையார் ஐ. தே. கட்சியைக் குற்றம் சாட்டியுள்ளார் (Sunday Leader – 19. 06. 1994). இதேவேளை, 'இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை இப்போது சுதந்திரக் கட்சி தயாரித்துக் கொண்டிருப்பதாக' சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார் (Sunday Times - 25. 06. 1994).

தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கின்றோம் என்று கூறிக்கொண்டு, தமிழீழ தேசியத்திற்குக் குந்தகமான அரைகுறைத் திட்டங்களை அறிவித்துவிட்டு அதை ஏற்றுக்கொள்ளும்படி புலிகளை வற்புறுத்துவதில், எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைதான் ஐ. தே. கட்சியின் தீர்வுத் திட்டமாக அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறப்போகின்றது என்று, 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கூறியுள்ளது.

தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தபடி சிங்களப் பேரினவாதத்தின் அடிவருடிகளாக இருந்து செயற்படும் தமிழ்க் குழுக்களே, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் எலும்புத்துண்டை ஏற்க மறுத்துவிட்ட சூழ்நிலையில், தமிழீழத் தேசியத்தின் பிரதிநிதிகளான புலிகள் இயக்கம் அதனை எப்படி ஏற்றுக்கொள்ளும்?

இனப்பிரச்சினையின் வேர்களைக் கண்டறிந்து, கள யதார்த்தங்களைக் கருத்தில் எடுத்து. வரலாற்றையும் அனுபவமாகக்கொண்டு. தீர்க்கதரிசனப் பார்வையுடன் நிரந்தர சமாதானத்துக்கான திட்டங்களைத் தீட்டுவதுதான், இனப்பிரச்சினையைத் தீர்க்க இருக்கும் உண்மையான வழி அதை விட்டுவிட்டு, வாக்கு வேட்டைக்கான தந்திரோபாயமாகத் தீர்வுத் திட்டங்களைக் கருதினால், இனப்பிரச்சினை இன்னும் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே போகும்; இரத்தம் சிந்தப்படுவதும் தொடர்ந்துகொண்டே இருக்கும்!

## றுவாண்டா...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுவாண்டாவில் நடந்த 'டுட்சி' இன மக்களுக்கெதிரான தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் முகமாக, அயல்நாடான புறூண்டியில் இருந்த 'குட்டு' இன அறிவுஜீவிகளை 'டுட்சி' இனத்தினர் கொன்றழித்தனர்.

முன்னரே கூறியபடி புறூண்டி தேசத்திலும் 'டுட்சி' இனத்தவர் சிறுபான்மையினராக இருந்தபோதும், புறூண்டி இராணுவத்தில் அவர்களே பெரும்பான்மையாக உள்ளனர் அதாவது 90 வீதமானோர் 'டுட்சி' இன இளைஞர்களாவர். இது ஆச்சரியமான செய்தியல்லவா! புறூண்டியின் ஜனாதிபதியாக 'குட்டு' இனத்தவரே பதவிவகிப்பார். பிரதமர் பதவி 'டுட்சி' இனத்திற்கென்றே ஒதுக்கப்பட்டுள்ளது. புறூண்டி இராணுவத்தில் 'டுட்சி' இனத்தவரின் கைஓங்கியிருப்பதால் புறூண்டியின் அரசியல்போக்கை நிர்ணயிக்கும் சக்தியாக 'டுட்சி' இனமக்களே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மே மாதம் றுவாண்டா - புருண்டி நாடுகளின் ஜனாதிபதிகள் [இருவரும் 'குட்டு' இனத்தவர்] பிரயாணம் செய்த விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் இரு ஜனாதிபதிகளும் கொல்லப்பட்டிருந்தனர்; 'டுட்சி' இன கெரில்லாக்களே விமானத்தை சுட்டு வீழ்த்தினர் என்ற செய்தி பரவியபோது, றுவாண்டா பேய் வீடாக மாறியது. இதுவரை அங்கு 5 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுவிட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் 'டுட்சி' இன மக்களாவர்.

www.eelamview.com

# கரும்புலிகள் ஒரு வரலாற்று அபூர்வம்

தத்துவங்கள் எல்லாம் தலைகீழாகிவிட்டன. வீறுகொண்டெழுந்த விடுதலைப் போராட்டங்கள் பல இடையில் வெம்பிப் பழுத்தவை போலாகிவிட்டன. அமைதி என்கிற மாயத் திரைக்குள் சமரசங்களும் இயலாமையும் தாண்டவமாடுகின்றன. இப்படியான இன்றைய உலகிலே, பனிப்போர் காலகட்ட நெருக்கடிகளையும் தாண்டி புதிய உலக ஒழுங்கினுள்ளும் புகுந்து, அதன் அழுத்தங்கட்கும் முகம் கொடுக்கத் தயாராகும் விடுதலைப் புலிகள் இயக்கம், 'கரும்புலிகள்' எனும் படையணியைப் போராட்ட வரலாற்றின் புது விசையாக அறிமுகம் செய்துள்ளது. தன்னலத்தை ''தனிநபர் சுதந்திரம்'' என்றும், மனித விழுமியங்களற்ற மேற்குலக அதிநவீன இயந்திர வாழ்க்கைமுறையை அறிவியல் வெளிப்பாடு என்றும் கருதி, தற்போதைய புதிய முதலாளிய பொருண்மிய ஒழுங்கின் கவர்ச்சியிலிருந்து விடுபட முடியாதோருக்கு இச்செய்தி, ஜீரணிக்க முடியாத – ஏன் நம்ப முடியாத – செய்தியாகத்தான் இருக்கும் ஏனென்றால் மனிதகுலம் காணாத மனித ஈகத்தின் அதி உயர் உச்ச வடிவமல்லவா இது!

இன்று கரும்புலிகள் போராட்ட வடிவத்தின் வரைவிலக்கணம் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. முன்னர் சீனப் புரட்சியின்போது மாவோ, பாரிய மரபுவழி இராணுவங்களிற்கு எதிராகப் போரிட எவ்வாறு 'கெரில்லா' போராட்ட முறையில் பல்வேறு புதிய உத்திகளைச் சூழ்நிலைக்கேற்ப புகுத்தினாரோ அவ்வாறு, இன்று நவீன போர்முறைகட்கு எதிராகப் போராடும் ஒரு சிறிய தேசிய இனம் தனது ஆன்ம பலத்தை மட்டும் நம்பிப் புகுத்திய புதுவடிவம்தான் 'கரும்புலி' படையணியாகின்றது. ''தன்னை இழந்து எதிரிகளில் பலரையோ அல்லது எதிரியின் பலம்மிக்க இலக்கினையோ அழிக்கும் ஒரு படையணியை'' உருவாக்கும் எண்ணத்தை தலைவர் பிரபாகரன், தொடக்ககாலம் தொட்டே தனது மனதில் அடைகாத்து வந்துள்ளார். எண்ணிக்கை, படைபலம், கருவிகள் போன்றவற்றில் எதிரியைவிட அளவில் குறைந்த ஒரு போராட்ட அணி வெற்றியடைவதற்கு, வெறும் வீராவேசத்திற்குப் பதிலாக விவேகத்தையும், விரக்திக்குப் பதிலாக மிக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட போர்த்திட்டமொன்றையும், அதேவேளை தன்னை இழப்பதன்மூலம் இலக்கை வெற்றிகொள்ளும் உத்தியையும் இணைத்தே தலைவர் பிரபாகரன், கரும்புலிகள் என்ற புதிய போராயுதத்தை வடிவமைத்துள்ளார் என்பது, வரலாறு சொல்லும் செய்தியாகும்.

எனவே, மனித குலத்தின் உன்னத விழுமியமாக – உயரிய ஈகமாக – பிறர்க்காகத் தன்னை அழித்தல் எனும் தற்கொடைப் பண்பாளர்களைக்கொண்ட படையணியை, வரலாற்றில் சமகாலத்திலோ அல்லது முன்னரோ வேறெங்கும் காணமுடியாது. விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் பற்றி ஆய்வுசெய்வோர் இதன் தோற்றுவாயைப் பழந்தமிழரின் மறவர் போர்ப் பரம்பரையில் – யப்பானிய போர் மரபுகளில்– தொட்டுக்காட்ட முனைகின்றார்கள். யப்பானிய நிலமானியமுறைச் சமுதாய காலகட்டத்திலே, யப்பானிய சக்கரவர்த்திகளின் முழு நம்பிக்கைக்குரிய போர் மரபுவழிப் பண்பாட்டைப் பின்பற்றும் 'சமுராய்' எனப்படும் போர்வீரர்கள், தமக்குரிய போர் மரபாக, தமக்கிட்ட ஆணைகளைச் செய்து முடிக்க முடியாதபோது – தமது மன்னர் தோல்வியைத் தழுவும்போது – தாமும் தம்முயிரை மாய்ப்பது வழக்கம். இது அக்காலகட்ட நிலவுடமைச் சமுதாய மரபாக இருந்தபோதும், யப்பானிய சமூகத்தில் இன்றும் தற்கொலை செய்யும் பழக்கம் ஒன்று நிலவுகின்றது. 'செப்பூடு' என்றும், பொது வழக்கில் 'கராகிரி' என்றும் அழைக்கப்படும் பண்டைய போர் மரபின் தற்கொலைச் செயற்பாடு இன்று, அழுத்தங்களிலிருந்து விடுபட யப்பானியர் பின்பற்றும் அவலநிலையாகிவிட்டது. எனவே இதனைப் புலிகளின் பண்பாட்டோடு ஒப்பிடமுடியாது. 2ஆம் உலகப் போரின்போது, 1941ஆம் ஆண்டு டிசெம்பரில், அமெரிக்கப் கடற்படைக் கப்பல்களைப் 'பேர்ள்' துறைமுகத்தில் தாக்கியழிக்க விமானமோட்டியொருவர் தனது விமானத்தைப் போர்க்கப்பலுக்குள் செலுத்தியமைபோன்று அபூர்வமான சம்பவங்கள், யப்பானிய வரலாற்றில் உண்டு. ஆனால், தற்கொலை வீரர்களைக் கொண்ட ஒரு படையணியை – அதன் தொடர்ச்சியான செயற்பாட்டை – அங்கு காணமுடியாது.

இதுபோலவே பழந்தமிழர் போர்ப் பரம்பரையான மறவர் பரம்பரையிலும் அரசனுக்காகத் தன்னை ஈகம் செய்யும் தன்மை, போர் மரபாகக் கொள்ளப்பட்டதாக அறிய முடிகின்றது. உண்மையான தமிழ்ப் பண்பாடு எதுவென அறிய முயன்ற தமிழறிஞர்கள் - அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ – இரத்தம் சிந்திப் போர் புரியும் வீரப்பண்பாட்டையே தமிழர் பண்பாடாக விதந்துரைக்க நேரிட்டது. வீரப்போரில் வீரச்சாவடைவதே ஆண்மகனின் கடமை என இளவயதிலேயே கற்பிக்கும் வீரத்தாய்ப் பண்பாடு, போரில் புறமுதுகு காட்டாது போரிட்டு உயிரை இழந்தோரை

வே. பாலகுமாரன்

நடுகற்களால் நினைவுகூர்ந்து அவர்களைத் தெய்வங்களாக மதித்துவருவது போன்றன பழந்தமிழர் பண்பாடாகும். அதுபோலவே தமது அரசன்மேல் கொண்ட பற்றுறுதி காரணமாகத் தம்மை இழக்க முன்வருவதும், அவர் தோல்வியைத் தழுவும்போதும் இறக்கும்போதும் தாமும் 'செஞ்சோற்றுக் கடன் தீர்க்க' இறத்தலும் அத்துடன் அவிப்பலி, தன்னை வெட்டல் என்கிற பல போர் ஒழுக்கங்களாகவும் அந்தப் போர்மரபு பேணப்பட்டிருந்தது. அதேபோல போரில் தமது தானைத் தலைவன் வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காக, 'கொற்றவை'க்குத் தமது தலையைத் தாமே வெட்டிப் பலி கொடுக்கும் வழக்கமும் இருந்தது. அத்தோடு போரில் தோல்வி, சிறைப்பட நேரும் அவமானம் போன்றவை ஏற்படும்போது, அரசனானவன் உண்ணா நோன்பிருந்து உயிரை விடும் 'வடக்கிருத்தல்' எனும் போரொழுக்கமும் இருந்திருக்கின்றது. இதனை யப்பானிய மரபோடு ஆய்வாளர் ஒப்பிடுவர். ஆனால் தற்கொடை என்பதை இத்தகைய சூளுரைத்தல், செஞ்சோற்றுக்கடன் தீர்த்தல், அவமானத்திலிருந்து விடுபடல்என்கிற நிலைகளிலிருந்து விடுவித்து, அதையொரு பரந்த அடிப்படையில் மக்களுக்கான போராட்ட அணியாக்கியமை இங்கே பாரிய குணாம்ச வேறுபாடாகின்றது. ஏனென்றால் இப் பழந்தமிழர் பண்பாடெல்லாம் இடையில் பல நூற்றாண்டுகளாக மறக்கப்பட்டு, வந்தவனெல்லாம் எமது இனத்தை அடிமைப்படுத்தி, அடிமை வாழ்வே தமிழன் பண்பாடாகிய வரலாறும் தமிழர்க்குரியது அல்லவா?



இது முன்னைய காலம். சமகாலத்தை நோக்கும்போது உலகில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தற்கொடைப் போராளிகளின் தாக்குதலை அவதானிக்க முடியும். குறிப்பாக, லெபனான் தலைநகரான பெய்ரூட்டில் அமெரிக்கப் படைத்தளம்மீது வாகனக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டமையைக் குறிப்பிட முடியும். இப்போது இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் இஸ்லாமிய 'கமாஸ்' இயக்கப்போராளிகள் சில தற்கொடைத் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இத்தாக்குதல்கள் 'கொலைக்குக் கொலை' என்கிற வகையில் உடனடியாக எழும் பழிவாங்கல் உணர்வின் காரணமாகத் தூண்டப்படுவதால், பல தடவைகளில், எதிர்பார்த்த விளைவுகளைத் தராமல் – தாக்கங்களை விளைவிக்காமலேயே - போய்விட்டன. முழுமையான போர்த்திட்டமொன்றின் பகுதியாக அல்லாமல் தனித்தனி உதிரிச் சம்பவங்களாக இவை அமைவதால், இவை தோற்றுவிக்கவேண்டிய பாரிய அச்ச உணர்வு, ஆழமான தாக்கங்கள் இஸ்ரேல் தரப்பில் ஏற்படவில்லை. இப்போராளிகளின் ஈகத்தைப் போற்றும் அதேவேளை, எமது கரும்புலிகள் போராட்ட வடிவம் எத்தகைய தாக்கத்தை எதிரியின் தரப்பில் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் கருத்தில் எடுக்கவேண்டும். சிங்கள இராணுவத்தரப்பிலே தோற்றுவிக்கப்பட்டுள்ள பெரும் பீதி உணர்வு, இத்தாக்குதல்களை என்ன பாடுபட்டாலும் தடுக்கமுடியாது என்கிற அவநம்பிக்கை உணர்வு என்பவற்றை வரலாற்றில் வேறெங்கும் - கரும்புலிகளின் தற்கொடைத் தாக்குதல்கள் தோற்றுவித்தமைபோல் – காணமுடிவதில்லை.

அத்தோடு இன்றைய நவீன உலகிலே போர்முறைகளும் வெகுநவீனமாகின்றன. இனிவரும் போர்முறைகளில் இயந்திரமனிதன், கணனிகள் என்பனவே மிகக்கூடிய பங்கினை வகிக்கும் என நம்பப்படுகின்றது. ஆனால் எந்த உயர் தொழில்நுட்பத்தாலும் கரும்புலித் தாக்குதல்முறையைத் தடுக்கமுடியாது என்பதே உண்மைநிலை. ஏனென்றால் உணர்வும் ஈகமும் மட்டுமல்லாமல், மனிதக் கணனியாகவும் அல்லவா கரும்புலிகள் செயற்படுகின்றனர். இம்மியளவும் இலக்குப்பிசகாத – நேரம் தவறாத– இடியோசைபோல், சூறாவளிபோல் மேற்கொள்ளப்படும் கரும்புலித் தாக்குதல்கள் இவ்வுலகையே ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டன.

எனவே இத்தகையதொரு வியத்தகு மனோபலத்துடன் மேற்கொள்ளப்படும் கரும்புலித் தாக்குதல்கள், உலகவரலாற்றில் மிக அபூர்வமாகத் தெறிக்கும் ஒளிக்கீற்று என்பதே, என்றும் வரலாறு சொல்லும் செய்தியாக இருக்கப்போகின்றது. புலிகளின் புதிய போர் மரபாகத் தோற்றுவிக்கப்பட்ட கரும்புலிப் படையணி, தமிழினத்தின் விடுதலை வெகுதூரத்தில் இல்லை என்பதை உரைக்கும் கட்டியமாகின்றது. இச்சிறிய தேசத்திற்குள்ளிருந்து தோன்றிய இப்படையணியின் பேரொளி எதிரியைக் குருடாக்கி விடுவதோடு, இதனைப் புரிய முடியாத எம்மவரையும் வரலாற்றுக் குருடராக்கிவிடும் அபூர்வத் தன்மை கொண்டது. காலின் கீழ் நசுக்கப்பட்ட இனத்தின் இதயத்திலிருந்து தோன்றிய தீப்பிழம்பாகக் கனன்று எரியும் விடுதலைத் தீதான் கரும்புலிகள் ஆகும்! ○

www.eelamview.com

# "எமது மண்ணுக்கே திரும்ப வரவேண்டும்"

**" இங்கு அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் பேராசிரியர் துரைராசாவின் ஆன்மா சொர்க்கத்திற்குப் போகவேண்டும் என்று கடவுளை வேண்டினர்; ஆனால் நான் அப்படிக் கேட்கமாட்டேன். பேராசிரியர் துரைராசா எமது மண்ணுக்கே திரும்பவரவேண்டும் என்றே கடவுளை வேண்டுகின்றேன்."**

வதிரியில் போாசிரியர் துரைராசாவின் இல்லத்தில் நடந்த இறுதிச் சடங்கின்போது, அக்கிராமத்தின் வயோதிபர் ஒருவர் கூறிய அர்த்தம் பொதிந்த வரிகளே மேலுள்ளவையாகும்.

பேராசிரியரின் தன்னலமற்ற மக்கள் சேவைக்கு - நற்பண்புகள் நிறைந்த அப்பேராசானை மக்கள் மதித்து அன்புகாட்டிய முறைமைக்கு - இந்த முதியவரின் வார்த்தைகள் நல்ல உதாரணம். இது தனியொருவரின் கருத்தல்ல; தமிழினத்தின் ஒட்டுமொத்தக் குரலும் - உணர்வும் இதுதான். இந்த உணர்வை பேராசிரியரின் பிரிவுபசார நிகழ்ச்சிகளின்போதும், பின்னர் அவரது மரணச்சடங்குகளின் போது பொதுமக்களும் - மாணவர்களும் - சக கல்விமான்களும் - அவருக்குச் செலுத்திய இறுதி மரியாதையிலும் கண்டுகொள்ள முடியும். இவை எல்லாவற்றிற்கும் மகுடம் சூடுவதுபோல, தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டையும் கௌரவ விருதையும் பேராசிரியர் பெற்றுக்கொண்டார். பிரிவுபசாரத்தின்போது பேராசிரியரது பணியைப் பாராட்டி ஒரு செய்தியையும், பேராசிரியர் மறைந்தபோது அவருக்கு அஞ்சலி செய்த ஒரு இரங்கற் செய்தியையும் வெளியிட்டு, பேராசிரியருக்கு ஒரு அதி உச்சக் கௌரவத்தைத் தலைவர் கொடுத்திருந்தார்.

ஈழத்தமிழினம் கல்விப் பாரம்பரியம் மிகக ஒரு மக்கள் இனம் என்பதைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொள்வர். உலகம் போற்றும் கல்விமான்கள் பலரை தமிழீழ அன்னை பெற்றெடுத்துள்ளாள் என்பதும் மறுக்கப்படமுடியாத உண்மை. ஆனால் இவர்களுள் எத்தனைபேர் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்தார்கள்? எத்தனை பேர் தனது இனத்தின் ஒட்டுமொத்த வாழ்வை உயர்த்திவிட தன்னலம் பாராது பாடுபட்டார்கள்? அறிவின் உச்சத்தில் பணிவைக் கடைப்பிடித்து மக்கள் சேவகனாக - மக்களில் ஒருவனாக - வாழ்ந்த மண்பற்றுள்ள பேராசான்கள் எத்தனைபேர்?

இந்த வினாக்களுக்கு விடையாக ''பேராசிரியர் துரைராசா!'' என்று எல்லோரும் ஒருமித்துக் கூறுவர். அந்தளவுக்கு பேராசிரியரின் அறிவும் - பண்பும் - பணியும் - தனிப்பட்ட வாழ்வும் - மேன்மையுடையதாக அமைந்திருந்தன.

தமிழ் மக்களின் சொத்துக்களில் ஒன்றாகிய கல்விக்குப் பேராபத்து நேர்ந்த ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை ஏற்றுக்கொண்ட அவர், தமிழரின் உயர் கல்விக்கு புத்துயிர் ஊட்டி - புது இரத்தம் பாய்ச்சியிருந்தார் என்பது வரலாற்று உண்மை.

அவர் வகித்த பதவிகளும் அவருக்கு வழங்கப்பட்ட ஊதியங்களும் சிங்கள அரசின் கைகளில் இருந்தபோதும், தமிழீழ தேசத்திற்கு - தமிழ் மக்களுக்கு - சேவை புரிவதற்கு அவற்றை ஒரு தடையாகச் சொல்லி இவர் தப்பிக்க முயன்றதில்லை. அவர் கலந்துகொண்ட எல்லாக் கூட்டங்களிலும் - எல்லாக் கலந்துரையாடல்களிலும் - எல்லா நிகழ்வுகளிலும் - தமிழினத்துக்கெதிரான ஒடுக்குமுறைபற்றியும் தமிழீழ தேசியம் பலம்பெறவேண்டிய அவசியம் பற்றியும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் தனது கருத்தை எடுத்துக்கூறுவார்.

நூல் வெளியீட்டுவிழாவிலும் தமிழீழ தேசியம்பற்றிப் பேசுவார்-

கல்வி மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட கூட்டங்களிலும் தமிழீழ தேசியம்பற்றிப் பேசுவார்-

சக கல்விமான்கள் மற்றும் வேற்று இன நண்பர்களுடன் கலந்துரையாடும்போதும் தமிழீழ தேசியத்தை வலியுறுத்திப் பேசுவார் -

. ஏன்! அவருக்கு நடந்த பிரிவுபசாரக் கூட்டத்திலும் அதையே தான் பேசினார்.

தமிழீழத்தில் நடந்த கூட்டங்களில் மட்டுமல்ல, சிங்கள தேசத்தில் - கல்விமான்கள் மத்தியில் - நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் அதையேதான் பேசினார்; வெளிநாடுகளில் நடந்த சந்திப்புக்களிலும் அதையேதான் வற்புறுத்தினார்.

தமிழரின் சுயநிர்ணய உரிமைபற்றியும், தமிழீழ தேசியத்தைப் பலப்படுத்தவேண்டிய அவசியம் பற்றியும் பேசுவதற்கு ஒருபொழுதும் அவர் அஞ்சியதுமில்லை; பின் வாங்கியதுமில்லை.

அதேவேளை, உலகளாவியரீதியில் தத்தமது வாழ்க்கைச் சக்கரங்களைச் சுழற்றுவதற்குத் திண்டாடும் ஏழை மக்களையும் அவர் அடிக்கடி நினைவூட்டிப் பேசி, அந்த மக்களின்பால் தான் வைத்திருக்கும் கரிசனையையும் எடுத்துரைப்பார். 500 கோடி உலக சனத்தொகையில் 1/5 பகுதியினர் பட்டினிக்கு முகங்கொடுத்து வாழப் போராடுகின்றனர் என்று எடுத்துக் கூறி, அந்தத் துர்ப்பாக்கியநிலை எமது மக்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்று அறிவுரை கூறுவார்.

*தமிழினத்தின் கல்வியில் அவரது சேவை ஒரு கலங்கரை விளக்கு.*
*உலகக் கல்விமான்கள் மத்தியில் அவர் ஒரு அறிவுப்பழம்.*
*எமது மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது*
*அவர் ஒரு போராளி.*
*அவரது கிராமத்திலோ வேட்டி கட்டிய ஒரு விவசாயி.*

''அரசு திட்டமிட்டு தமிழரின் கல்வியை அழிக்க முனைகின்றது. ஆனால் தமிழினத்தின் கல்வியை அழியவிடாது பாதுகாப்பது எங்களின் கடமை'' என்று, வதிரியில் நடந்த பிரிவுபசார விழாவில் பேசிய பேராசிரியர் அவர்கள......

'' எமது இயற்கை வளத்தையும் கல்வியால பெறப்படும் மூளைவளத்தையும் கொண்டு எமது மனித வளத்தையும் சரியாக வளர்த்தெடுத்து - பயன்படுத்தி - எமது தேசத்தின் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும்'' என்று தேசியப் பிரக்ஞையுடன் பேசினார். அத்துடன் நின்று விட்டாரா......? இல்லை.

'' கிராமங்கள் வளர்ந்தால்தான் நாட்டின் பொருளாதாரம்வளரும்'' என்றார்.

'' ஏழை எளிய மக்களின் வாழ்வு உயர்ந்தால்தான் கிராமம் வளரும்'' என்றார்.

'' இந்த ஏழை எளிய மக்களின் வாழ்வை வளம்படுத்த சனசமூக நிலையங்கள் பாடுபடவேண்டும்'' என்றும் அறிவுரை கூறினார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் நியாயம்பற்றி சிங்கள தேசத்தில் - சிங்களப் புத்திஜீவிகள் மத்தியில் விவாதிக்கும்போது. எதிராளிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டோ அல்லது தன்னலத்தை அடிப்படையாகக்கொண்ட காரணங்களுக்காகவோ விட்டுக் கொடுத்ததோ அல்லது 'சளாப்பிக்' கதைத்ததோ இல்லை. இந்த நேர்மையை-தெளிவான அவரது அரசியல் நிலைப்பாட்டை - பேரினவாத உணர்வுடன் உள்ள சிங்கள இனத்தின் புத்திஜீவிகள்கூட மதித்தனர்.



பிரிவுபசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது பேராசிரியர் ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்தார்.

ஒருநாள் கத்தோலிக்கச் சிங்களவரான ஒரு கல்விமான் பேராசிரியரிடம் சொன்னாராம் -

''சிங்களவர் மத்தியில் கத்தோலிக்கரான நாங்கள் மிகச் சிறுபான்மையாக இருக்கின்றோம். அதனால் பௌத்த சிங்களவர்கட்கு விட்டுக்கொடுத்து - சகிப்புத் தன்மையுடன் இரண்டாம் நிலைப் பிரசைகளாக, அமைதியாக வாழக் கற்றுக்கொண்டுள்ளோம். அதுபோல நீங்களும் (தமிழினம்) விட்டுக்கொடுத்து அமைதியாக வாழலாம்தானே'' என்று.

இதற்குப் பதில்கூறும்போது. சிங்களப பேரினவாத அரசுகளின் தமிழின விரோத நடவடிக்கைகளை பேராசிரியர் விளக்கிவிட்டு,

''..... தமிழர் ஒரு தேசிய இனம் (Nation); அவர்களுக்கு என்றொரு தனித்துவமான நிலமுண்டு - அதேபோல மொழி உண்டு - பண்பாடுண்டு - பொருளாதார வாழ்வுண்டு. ஆகவே அவர்கள் தம்மைத் தாமே ஆட்சிசெய்யக்கூடிய சுயநிர்ணய உரிமையையும் கொண்டிருக்கின்றனர்; அவர்கள் தம்மைத் தாமே ஆட்சிசெய்ய விரும்புகின்றார்கள்'' என்று பதிலளித்தாராம்.

இந்த விடயங்களை ஒரு கூட்டத்தில் வைத்து பேராசிரியர் அவர்களே தெரிவித்தார்.

தமிழீழத் தேசிய உணர்வுடன் பேசியது மட்டும்தானா பேராசிரியர் செய்த பணி? இல்லை; பேசியபடி வாழ்ந்தும் காட்டியதுதான் அந்தப் பேராசானின் பெருமைக்குக் காரணம்!

''சலுகை பெறக்கூடிய உரிமை இருந்தும ஏன் நீங்கள் கப்பற் பயணத்தைத் தவிர்த்து. கொலைக் கடலான கிளாலியூடாக கொழும்புக்குப் பயணம் செய்கின்றீர்கள்?'' என்று அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கேட்டபோது, அந்தப் பெருமகன் பெருமைபொங்கக் கூறிய பதில், தமிழீழப் போராட்ட வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டது.

''எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன், கிளாலி ஊடாகப் பயணம் செய்யக்கூடாது என அரசு சட்டம் போட்டது. ஆனால் மக்கள் அதை மீறிப் பயணம்போய் அரசின் சட்டத்தை உடைத்தனர். இதுவும் அரசுக்கு எதிரான ஒரு போராட்ட வடிவம் ஆகும். நானும் மக்களுடன் சேர்ந்து எனது பங்களிப்பையும் செய்கின்றேன். இதன்மூலம் மக்கள் படும் வேதனையில் நானும் பங்குகொண்டு மனநிறைவடைகின்றேன்'' என்று மனமகிழ்ச்சியுடன் பேராசிரியர் கூறியிருந்தார்.

இன்னுமொரு தடவை, கொழும்பிலிருந்து கப்பல்மூலம் தீவகத்தை அடைந்த பேராசிரியர், ஒருநாள் இரவை அகதிமுகாமில் எமது மக்களுடன் கழித்தார். அவருக்குத் தனி வசதி செய்துகொடுக்க அங்கிருந்த சிலர் முயன்றபோதும் மறுத்துவிட்டார். துன்பப்பட்ட தனது தேசத்தின் குடிமக்களுடன் சேர்ந்து வாழ்வைப் பகிர்ந்துகொள்வதில் அவர் இன்பமடைந்திருந்தார்.

**எல்லாளன்**

பல்கலைக்கழகத்திலிருந்து தனது கிராமமான வதிரிக்குச் செல்லும் வேளையில், வல்லை வெளியில் - இரத்தப் புற்றுநோய் தாக்கிய அந்த உடம்பை வைத்து அந்தப் பேராசான் மிதிவண்டியுடன் போராடும்போது - வாகனத்தில் அவரை முந்திச் செல்ல முனையும் போராளிகள், கண்ணிவெடி வயலில் கடப்பதுபோல நெளிந்து - மனங்குமைந்தபடி கடப்பர். மனம் வராது கீழிறங்குபவர்களைப் பார்த்து வெள்ளை மனதுடன் விடைகொடுக்கும் அந்தப் பண்பு, கோடியில் ஒருவருக்குத்தான் இருக்கும்.

யாழ். பல்கலைக்கழக கட்டடமொன்றில், 'துணைவேந்தர்' என்ற பெயர்ப்பலகையுடன் அதிஉயர் அதிகாரத்தையும் கொண்ட அந்த அறையினுள் பேராசிரியர் இருக்கும்போது, பாலர் வகுப்பறை போன்றே அது தென்படும். பல்கலைக்கழக மாணவர்கள் சிற்றூழியர்கள் சகஜமாக உள்ளே போவதும் - சந்தோஷமாக உரையாடுவதும் - சிரித்த முகத்துடன் வெளியே வருவதும் வழமையான காட்சிகள்.

சாதாரணமாக இத்தகைய உயர் பதவியில் இருக்கும் ஒரு நபரைப் பார்க்கவே சிரமப்படும் நிலையில், அன்றாடம் இவரை எல்லோரும் சிரமமின்றிப் பார்த்தனர்; அவருடன் பேசினர்

அவரது சொந்தக் கிராமத்திலும் உயர எழுப்பிய மதிற்சுவருக்குள் சிறையிருந்து - மக்களிடமிருநது அந்நியப்பட்டு - அவர் வாழவில்லை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# கரும்புலி; அடிமுடி அறிய முடியாத அற்புதம்!

கரும்புலி,
சாவுக்குத் தேதிகுறிக்கும் சரித்திரம்.
கந்தகத்தை மேனியிற்கட்டிய சந்தனம்.
வீதியுலாவுக்காக வெளியில் வராத விக்கிரகம்.
உயிர்மூச்சை ஊதிவிடும் உன்னதம்.
அடிமுடியை அறியமுடியாத அற்புதம்.
தென்றலும், புயலும் சேர்ந்த கலவை.
இவர்களை எழுதத் தொடங்கினால்......
எந்தமொழியும் தோற்றுப் போகும்.
வார்த்தைகள் வறுமை அடையும்.
உளவியலாளர்கள் உள்ளேபுகுந்தாலும்
வெறும்கையோர்டுதான் வெளியே வருவார்கள்.
கற்பனைக்கவிஞர்கள் கவிதை எழுதினால்
அற்புதம் எனபார்கள்,
அடுத்தவார்த்தை வராது.
சித்திரக்காரரர்களும்
தீப்பிழம்பைத்தானே தீட்டமுடியும்.
பக்கதிருந்து பழகியவர்கள்கூட
குறிப்புக்கள் மட்டும்தான் கூறமுடியும்.
ஆழதம்தாண்டினாலும் மூலவேர் தெரியாது.
சமுத்திர நீரை
அகப்பையால் அள்ளி அளக்கமுடியுமா ?
ஓடும் முகிலை
ஏணிவைத்து எட்டித்தொட முடியுமா ?
எதிரியின் எந்தவலுவும்
இறுதியில் இவர்களிடம் சரணடையும்.
கடைசி நொடிவரை சிரித்தபடி திரிவர்.
மறுநாள்
வெடித்த செய்தி வெளிவரும்போது;
ஜாதகமும் சோதிடமும்
தங்களுக்குத் தாங்களே தீமூட்டிக் கொள்ளும்.

## உலைக்களம்

வியாசன்

காலால் நடந்து,
வாயால் மொழிந்து,
கையால் தலைவாரிக் கொண்டு,
எல்லோரையும் போலவேதான் இவர்களும்.
உள்ளே எரியும் விடுதலைக் கனல்மட்டும்
வேறுபட்டது.
உயிர்ப் பூவை கிள்ளி எடுத்து
விடுதலைக்கு விலைகொடுக்கும் வித்தியாசமானவர்கள்.
கிட்டநெருங்க முடியாத இலக்குகளைக்கூட
தொட்டு அசைத்துவிடும் துணிச்சலர் இவர்.
முதுகில் வேர்க்குரு போட்டாலே......
முந்நூறு மருந்துகள் தேடும் உலகில்
சாவைத் தம் தோள்களில் சுமந்து
நொடிகளை கணக்கிட்டு நகரும் நூதனங்கள்.
காற்றிலும். நீரிலும் இவர்கள் கலக்கும்போது,
காற்றுககு வேர்க்கும்.
நீர் நெருப்பாகிவிடும்.
இவர்களுக்கு;
சூரியன் கைகளுக்கு எட்டும் தூரம்தான்.
பசிபிக் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
கரும்புலிகள்;
தலைவன் தலைவாரிவிடும் புயல்கள்.
தாயை நேசிக்கும் அளவுக்கு
தலைவனையும் நேசிப்பவர்கள்.
தாயகத்தை மட்டும் பூசிப்பவர்கள்.
ஆவிபிரியும் அடுத்த கணம்பற்றிய அச்சம்
இவர்களின் அகராதியில் அச்சிடப்படுவதில்லை.
''ஜுலை-5-1987''
கருமைக்கும் பெருமைவந்த நாள்.
புலியொன்று முதல் கரும்புலியான தினம்,
நெல்லியடியில்
''மில்லர்'' புதிய வரலாற்றை தொடக்கிய நாள்.
''எல்லாம் சரி
வடமராட்சி எமது கட்டுப்பாட்டில்''
கொழும்புக்குச் செய்தி அனுப்பியவனின்
வாய் மூட முன்னர்
செவிப்பறைகள் கிழிந்தன.
சாவு நேரே ஓடிவந்து
முகத்தில் சந்திக்குமென்று
எதிரி எப்படி எதிர்பார்த்திருப்பான்.
''உயிராயுதம்'' வலுவானது.
கரும்புலிகள்,
தேவை அறிந்து செல்பவர்களே அன்றி
சாவை விரும்பிச் சந்திப்பவர்களல்ல...
இவர்கள் வசந்தம் தழுவாத கொடிகளோ
முகில்கள் முத்தமிடாத மணைமுகடுகளோ அல்ல.
இதயம் இரும்பாலானவர்களும் அல்ல.
பனியாய் உருகும் நெஞ்சுக்கும்
பாகாய் இனிக்கும் வார்த்தைகளுக்கும்
உரிமையாளர்கள.
வெடித்த பின்னரும்;
இவர்கள் எல்லோரும் வெளிச்சத்துக்கு வருவதில்லை.
சுவரொட்டியில் சிரிப்பவர்கள் சிலர்தான்.
'நடுகல் நாயகர்கள்' ஆகும் வாய்பபும்
எல்லோருக்கும் ஏற்படப் போவதும் இல்லை.
கல்லறைகூட இல்லாத காவியமாய்
வாய்விட்டு சொல்லியழும் வாய்ப்பும் இல்லாமல்
சிலருக்கு வெளியே தெரியாத
வேரின் வாழ்வு.
பலருக்கு மரணம் வாழ்வின் முடிவு
கரும்புலிகளின் ஜனனம் மட்டும்
மரணத்தில்தான் ஆரம்பம்.
கால நதியில்
இவர்கள் ஓடிக் கரைய மாட்டார்கள்
மற்றவர்களுக்கு
இனி என்ன செய்வதென்று
தலைவெடிக்கும் போதுதான்
இந்த சுகந்த ஊதுபத்திகள்
உடல் வெடித்துப் போகிறார்கள்.
''ஊரறியாமலே உண்மைகள் கலங்கும்
ஒருபெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே விழுதினைப் புரியும்
வெடிமருந்தேற்றிய வேங்கையைத் தெரியும்.''
பூகம்பத்தை போத்தலில் அடைத்ததுபோல
வந்தவரிகளில் வென்றவரிகள் இவை.
கரும்புலிகளுக்கு காணிக்கை என்ன?
கண்ணீரா ?
கல்லறையா ?
இல்லை.
எதுவுமே இல்லை.
நெஞ்சின் நினைவே
நெடிய கோபுரம்.
கரும்புலி
அடிமுடி அறியமுடியாத அற்புதம்! ○

## எமது மண்ணுக்கே...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனசமூக நிலையம் சென்று பத்திரிகை வாசித்தார்; குடும்பத்தாருடன் சேர்ந்து தோட்டம் செய்தார்; கிராமத்து விதிகளில் நின்றபடி மக்களுடன் அன்றையப் புதினங்களைப்பற்றிக் கதைத்தார்; மக்களுடன் மக்களாகவே வாழ்ந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டு கொழும்பு திரும்ப ஒருசில நாட்கள் முன்னர் பேராசிரியரை அழைத்த புலிகளின் அரசியல் துறையினர், அவரது சேவையைப் பாராட்டும் முகமாக ஒரு விருந்துபசாரம் நடாத்தி அவரைக் கௌரவித்தனர். தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்குகொண்ட அந்த நிகழ்வில் பேராசிரியர் துரைராசாவும் உரையாற்றினார்.

வழமைபோலவே போராட்டத்தின் தேவை பற்றியும் - சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறை பற்றியும் - தன்னிறைவான பொருளாதாரத்தின் அவசியம்பற்றியும் பேசினார். அப்பேச்சின் ஒரு கட்டத்தில் -

'' ...... எமது இனத்தின் விடுதலைக்காக தங்களது உயிரைத் தியாகம்செய்ய ஆயத்தமாக இருக்கும் புலிகளுக்கு, நான் தலை சாய்த்து வணக்கம் செலுத்த விரும்புகின்றேன் '' என்று, தனது தூய நாவால் போராளிகளை மதித்து உரையாற்றிய அந்தப் பெருந்தகை, எப்மைவிட்டு நிரந்தரமாகவே பிரிந்துவிட்டார்.

பேராசிரியர் துரைராசா அவர்கள், புலமையும் பரந்த பார்வையும்கொண்ட பேராசான் மட்டுமல்ல -

தமிழ் மக்களின் இதயங்களைக் கவர்ந்தெடுத்த ஒரு மக்கள் சேவகன் மட்டுமல்ல -

தமிழீழ அன்னைக்குத் தொண்டு செய்த அதன் தவப்புதல்வன்.

தமிழீழ அன்னைக்கு வலுசேர்க்கப் பாடுபட்ட ஒரு தேசப்பற்றாளன்.

ஒரு உண்மை மனிதன்.

தமிழினத்தின் கல்வியில் அவரது சேவை ஒரு கலங்கரை விளக்கு.

உலகக் கல்விமான்கள் மத்தியில் அவர் ஒரு அறிவுப் பழம்.

எமது மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது அவர் ஒரு போராளி.

அவரது கிராமத்திலோ வேட்டி கட்டிய ஒரு விவசாயி.

இவ்விதம் மக்களின் அனைத்து மட்டங்களிலும் தனது பண்பான - நேர்மையான - பணிவான - சேவையால் மக்களின் மனதில் இடம் பிடித்துவிட்ட பேராசிரியரின் திடீர் மறைவு, தமது குடும்ப உறுப்பினர் ஒருவரை இழந்துவிட்ட தவிப்பைத்தான் மக்கள் ஒவ்வொருவரிலும் ஏற்படுத்தியுள்ளது.

தனது உணர்வை வெளிப்படுத்த வதிரிக் கிராமத்தின் அந்த முதியவர் பயன்படுத்திய வார்த்தைகளில்தான் எவ்வளவு அர்த்தம் பொதிந்துள்ளது!

'' பேராசிரியர் துரைராசா எமது மண்ணுக்கே திரும்ப வரவேண்டும்! '' ○

www.eelamview.com

# இது கரும்புலிகளின் காலம்



சிலாவத்துறை முகாம் மீதான தாக்குதலின்போது, அம்முகாமின் மீது ஒரு கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டது. வெடிமருந்து ஏற்றிய வாகனமும் தயாராக இருந்தது. ஆனால் யார் இதனைக்கொண்டு போய் எதிரியுடன் மோதுவது? இதுதான் பிரச்சனையாக இருந்தது. ஏனெனில் யாழ்ப்பாணத்திலிருந்தும், மன்னாரிலிருந்தும் இதற்காகப் பல கரும்புலிகள் வந்திருந்தனர். யார் கரும்புலியாகிப்போவது என்பதில அவர்களுக்குள் போட்டி. இதை என்னவென்று சொல்வது...? சாவதற்குப் போட்டியிடுகிறார்கள்! இதில் மட்டுமல்ல எல்லாக் கரும்புலித் தாக்குதல்களிலும் இதே நிலைதான்.

தான் - தனது குடும்பம் - என்ற சுயநல வேலிபோட்டு அதற்குள முடங்கிக்கிடந்த இந்த தமிழ்ச் சமூகம், எவ்வாறு இப்படி மாறியது? இன்று உலகையே பிரமிக்கச்செய்யும் - உருக்குப்போன்ற உறுதியும், அஞ்சா நெஞ்சமுமுடைய - இந்தக் கரும்புலி வீரர்கள் எவ்வாறு இந்த சமூகத்திலிருந்து உருவனார்கள்? எமது சமுதாய வரலாற்றை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும ஒருவரிற்கு, இவ்வாறான வினாக்கள் எழும்பாமலிருக்க முடியாது.

பண்டைய காலத்திலிருந்தே நாகரிகத்தில் மேலோங்கியிருந்த இனமாகத் தமிழினம் சிறப்புற்று இருந்தது. அவர்களது வீரம, தற்கொடைபற்றி ஏராளமான வரலாறுகள் உள்ளன. இவ்வாறு தம்மைத்தாமே ஆண்டு, பெரும் அரசுகளை நிறுவி, சிறப்புற்று வாழ்ந்தவன் தமிழன். ஆனால் கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்நியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு தன்னைக் கூனிக்குறுக்கி, அடிமை வாழ்வே சுகம் என்று வாழப் பழகிக்கொண்டான். இந்த அடிமை யுகத்தின் இறுதிப் பகுதியாக சிங்கள அரசின் ஒடுக்குமுறை அமைந்தது. ஒடுக்குமுறைக்கெதிராக தமிழர்கள் செய்த சாத்வீகப் போராட்டங்கள் அனைத்தும், ஆட்சியாளர்களது இரும்புக் கரங்களினால் அடக்கியொடுக்கப்பட்டன. இந்நிலையில்தான தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்உருவாக்கப்பட்டது. அடக்கியொடுக்கப்பட்ட தமிழினத்தின் குரல் புரட்சிகர ஆயுதப் போராட்ட வடிவமாக மாறியது. தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது சிறு வயதிலேயே சீரும சிறப்புமாக, தம்மைத்தாமே ஆண்ட பழந்தமிழர் வரலாறுகளை உள்வாங்கிக்கொண்டார். இதனால்தான் ஒரு புதிய வீர பரம்பரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டினூடாகக் கட்டியெழுப்பினார். தலைவரது வீரமும், அஞ்சாமையும், கொள்கைப் பற்றும், நேர்மையும் தான் இவ்வாறான வீர சமுதாயம் வளர அடிகோலின. விடுதலைப் புலிகளினது மூத்த தளபதிகளும் இவ்வாறான பண்புகளை உடையவர்களாகவே வளர்க்கப்பட்டனர். இப்படிப்பட்ட வீரமும் தற்கொடையும்கொண்ட வழிகாட்டலில்தான், விடுதலைப் புலி வீரர்கள் வழிநடத்தப்பட்டார்கள். இலட்சியத்திலே உறுதியும் கொள்கையிலே பற்றும், உண்மையும், நேர்மையுமுள்ள உன்னதமான போராளிகளாக அவர்கள் உருவாகினார்கள். தாயக விடுதலைக்காக - மக்களிற்காக - எந்நேரமும் தம்முயிரை அர்ப்பணிக்கத் தயாராகவே விடுதலைப் புலி வீரர்கள் வளர்ந்தனர். இதுதான் விடுதலைப் புலிகளது பாரம்பரியம். இந்த வீர தியாகப் பாரம்பரியத்தின் உயர்வடிவமாகவே கரும்புலி வீரர்கள் உருவானார்கள்; புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் புதிய போர்வடிவமாகக் கரும்புலிகள் தோற்றம் பெற்றனர்.

*வீ. கஸ்ரோ*

1981ஆம் ஆண்டு தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் சிங்கள அரசால் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அந்தவேளையில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தற்கொலைப் படையொன்றுக்குத் தாமே தலைமைதாங்கி, கொழும்பு சென்று அவர்களை மீட்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் பல்வேறு காரணங்களினால் இத்திட்டம் நடைபெறாமல் போயிற்று. இதேபோல 1982ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களை இந்திய அரசு சிறையில் தடுத்து வைத்திருந்த போது, இலங்கையரசு அவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தது. இலங்கை அரசிடம் தலைவரை ஒப்படைக்க இந்திய அரசு முற்படின் அதனைத் தடுத்து நிறுத்துமுகமாக, மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் கோபுரத்தின் மீதேறி ஒருவர் பின் ஒருவராகத் தற்கொலை செய்து உலகத்தின் கவனத்தைத் திசை திருப்புவது என, இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களான லெப். கேணல் பொன்னம்மான், கப்டன் ரஞ்சன் போன்றோர் முடிவெடுத்திருந்தனர். இவ்வாறாக, விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்திலேயே தலைவரிடமும் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களிடமும், கரும்புலித் தாக்குதல் குறித்ததான சிந்தனைகளும எண்ணவோட்டங்களும் நிறைந்து காணப்பட்டன.

1987 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசு, வடமராட்சிப் பகுதி மீது பெருமெடுப்பிலான படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டது. 'ஒப்பறேசன் லிபறேசன்' எனப் பெயரிடப்பட்ட நடவடிக்கையின்மூலம், வடமராட்சிப் பகுதியினைத் தனது ஆதிக்கப் பிடிக்குள் சிங்கள அரசு கொண்டுவந்தது. வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டன. இந்நிலையில்தான் சிங்கள இனவாத பூதத்தின் பிடியை உடைத்தெறிய, முதலாவது கரும்புலித் தாக்குதல் தலைவரால் திட்டமிடப்பட்டது. 1987 ஜூலை 5 ஆம் திகதியன்று, வடமராட்சியில் பூகம்பம் வெடித்தது; கரும்புலியொன்று காவியம் படைத்தது. ஆம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் முகாமமைத்த இராணுவத்தினர் மீது, கப்டன் மில்லர் வெடிமருந்தேற்றிய வாகனத்துடன் பாய்ந்தான். இங்கு மில்லரைப் பற்றிச் சிறிது கூற வேண்டும். துடிப்பும் அறிவாற்றலும் உள்ள இந்த இளம் புலிவீரன் ஒரு சிறந்த சாரதியாவான். இந்தக் கரும்புலித் தாக்குதலுக்குரிய வெடிமருந்து வாகனத்தைத் தயார்ப்படுத்தியது முதல், வெடிமருந்தினைக் கெட்டியாக அடைவது வரை சகல தயாரிப்பு வேலைகளையும்அவனே முன்னின்று செய்தான். அவ்வளவு தூரம் நெஞ்சுரமும், துணிவும் கொண்டவர்கள்தான் கரும்புலிகள்

நாம் ஒரு சிறிய தேசிய இனம்; எதிரியோ மிகவும் பலம் பொருந்தியவன். ஆட்பலத்தில், ஆயுத பலத்தில் எம்மைவிட அவன் உயர் நிலையிலுள்ளான். தனது ஆதிக்க கரங்களை நீட்டி எம்மை அழிக்க முற்படும்போது எம்மால் என்ன செய்யமுடியும்? இந்நிலையில்தான் விடுதலைப் போராட்டத்தின் அதி உயர் வடிவமாகிய உயிராயுதத்தை நாம் பயன்படுத்துகிறோம். எந்தவொரு அரசாலோ அன்றி நவீன தொழில்நுட்பத்தாலோ தடுக்கமுடியாத ஒரு ஆன்மீக மனோபலம்தான், கரும்புலிகளது வெளிப்பாடு. எனவேதான், எமது சமூகத்தின் வீர உணர்வை - விடுதலையின் தாகத்தை - வெளிப்படுத்தும் உயர் வடிவமாகவே கரும்புலிகள் உள்ளனர்.

அனைத்துப் புலிவீரர்களும் தாயக விடுதலைக்காக - மக்களிற்காக - தமதுயிரை ஆகுதியாக்கத் தயாராகவேயுள்ளனர். ஆனால் கரும்புலிகளோ தமது சாவின் நாள், நேரம் குறித்துத் துல்லியமாகத் தெரிந்துகொண்டே போர்க்களத்திற்குப் புறப்படுகின்றார்கள். இதுதான் இவர்களுள் உள்ள வேறுபாடு! இயல்பாகவே அச்சமூட்டும் ஒரு இலக்கை நோக்கி - பல்வேறு திசைகளிலிருந்து வரும் எதிர்ப்புகளையும் மீறி - துணிகரமாக, கவனம் சிதறாமல் மோதவேண்டும். இதுதான் கரும்புலிகளது பணி. இதற்கு வீரமும் விவேகமும் தேவை. தாய்நாட்டிற்காக, மனவுலக ஆசைகளைத் துறந்த தூய மனம் வேண்டும்; அச்சத்தின் ஆணிவேர்களையே அறுத்தெறிந்தவனாக இருக்கவேண்டும. இது மிகவும் கடினமானது; கடும் பயிற்சியும் துணிவுமுடைய ஒருவராலேயே இதனைச் சாதிக்க முடியும்.

''கரும்புலி என்றால் என்ன? அச்சொல்லின் உள்ளார்ந்த அர்த்தம் என்னவென்று பார்க்கும்போது அதன் முழு வடிவமும் தெரியவருகிறது. 'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத - பூடகமான - இரகசியத் தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப்பெற்றிருக்கிறது.'' இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் கரும்புலி என்ற சொல்லின் அர்த்த பரிமாணங்கள் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார்.

இன்று பல்நூற்றுக்கணக்கான புலிவீரர்கள் கரும்புலிகளது அணியில் தம்மை இணைத்துக்கொண்டுள்ளனர் ஒவ்வொரு கரும்புலித் தாக்குதல் திட்டமிடப்படும்போதும் ஒவ்வொரு வீரனும் தன்னை ஆகுதியாக்குவதற்குப் போட்டியிடுகின்றான். இவ்வாறான வீரமும் விவேகமும் தற்கொடையுணர்வும் கொண்ட மாவீரர்களால்தான் விடுதலைப்போராட்டம் முனைப்புடன் நகர்ந்துகொண்டிருக்கிறது. தர்மத்தையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்ட எமது விடுதலைப் போராட்டமானது வெல்வதற்கு அதிக காலமில்லை. இதற்குக் காரணமாகவுள்ள இந்தக் கரும்புலி மாவீரர்களை நினைவுகூர்ந்து, அவர்களிற்கு அஞ்சலி செலுத்துவோமாக! ○

# புகை முடித்த பகை!

கடற்கோட்டைக்குள் ஒரு குகை. அங்கே... உஷ்ணமான மூச்சுகளின் வெப்பத்தால் உலர்ந்து போகிறது உவர்நீர்.

கடலன்னை தன் அலைக்கரங்களால் அந்த உஷ்ண மூச்சுகளின் உறைவிடங்களைத் தழுவிச் சாந்தப்படுத்த முனைகிறாள்.

சிறுத்தைகளின் கடலரசன் அங்கே பதுங்கிய வண்ணம இருக்கிறான். அவனது அங்கங்கள் அனைத்திலுமே பாயப் போவதற்கான அறிகுறி தென்படுகிறது.

சிறுத்தை ஒன்று சினத்தை வெளிப்படுத்தியது.

''மச்சத்தைத் தேடி வலைவீசச் சென்றவர்களை மிச்சமேதும் இல்லாமற் செய்தவர்களைச் சுமா விடுவதா? அரசே! உடனே உத்தர விடுங்கள். அவர்களையும் மிச்சமில்லாமற் செய்துவிடுகிறேன்.''

ஆர்ப்பரித்த சிறுத்தையை அமைதிப்படுத்தினான் அரசன்.

''தருணம் வரட்டும்.''

அதற்குள் மற்றுமொரு சிறுத்தை சீற்றத்தைச் சிந்தியது.

''அரசே! அந்நியன் எமது கடற்பரப்பில் ஆதிக்க வெறிகொண்டு எம்மவரைக் கொலை செய்வதா? இது எமது கடல் அல்லவா? எமது கடலில எமது மக்கள் பயணம் செய்ய உரிமையில்லையா? ஆணையிடுங்கள் இப்போதே. ஆதிக்க வெறியரை அக்குவேறு, ஆணி வேறாக்குகிறேன்.''

கடலரசனது கண்கள் கனலைச் சொரிந்தன.

''ஆகட்டும்.''

ஆணையிட்டான் வார்த்தைகளுடன் வெளியாகிய தீப்பொறிகள, சிறுத்தைகளின் சித்தத்தைச் சூடேற்றின பொங்கி எழுந்தது சிறுத்தைகள் கூட்டம்.

''பகை முடித்துச் சாவினை அணைப்பதே எமது குறிக்கோள்.''

ஆக்ரோஷத்துடன் ஆரவாரித்தன.

குகையின் வாயில் மெல்லத் திறந்துகொண்டது. பொங்கியெழுந்த சிறுத்தையொன்று புகையெனக் கிளம்பிக் கடல் மையத்துள் மறைந்து போனது.

சீற்றமே உருவாகச் சிறுத்தை. சிங்கத்தின் வாரிசுகளைத் தேடித் தமிழீழக் கடற்பரப்பெங்கும் சலலடை போட்டது.

சிங்கத்தின் வாரிசுகள் களியாட்ட விழா நடத்தி முடித்தபின் கடலுக்குள் பவனி வரத்தொடங்கின.

சிறுத்தையின் விழிகள் தீப்பிழம்பாகின. இரையைத் தேடிவிட்ட திருப்தியுடன் இலக்கை நோக்கிச் சீறியது.

சல்லாபத்தில் ஈடுபட்டிருந்த சிங்க வாரிசுகள், சிறுத்தையின் சீறலைக் கேட்டுச் சில்லிட்டுப்போயின; சிதறி ஓட முயன்றன.

ஒரு கணம் பதுங்கிய சிறுத்தை, புயலென எழும்பிப் பாய்ந்தது பகை நோக்கி.

புகையொன்று கிளம்பிப் பூகம்பம் வெடித்தது.

தீப்பிழம்பு மின்னலெனப் பளிச்சிட அதிர்ந்தது தமிழீழம்.

தொடர்ந்தது பேரிடி.

சிவந்தது தமிழீழக் கடற்பரப்பு.

சிறுத்தையின் இலட்சிய வெற்றியால் கனிந்தது கடலன்னையின் உள்ளம்; குளிர்ந்தது தமிழத்தாயின் நெஞ்சம.

தன்னை முத்தமிட்ட மைந்தனை நெஞ்சாரத்தழுவி நெகிழ்ந்து போகிறாள கடலன்னை.

தன்னிரு தளிர்க்கரங்களால் அவனை ஏந்தித் தமிழ்த்தாயிடம் ஒப்படைக்கிறாள்.

ஆம், அவளது வயிறெனும் குகைக்குள் மீண்டுமொரு கரு பகைமுடிக்க வெனப் புலியாக உருவாகிறது!

— மலரன்னை ○

# எழுத முடியாத காவியங்கள்



எப்படி இவர்களுக்கு முகங்களில்லையோ முகவரிகளில்லையோ, அதே போலத்தான் எத்தகைய அறிவாலும், எத்தகைய ஞானத்தாலும் கணிப்பீடு செய்யக்கூடிய வகையில் இவர்களது உள்ளகமும் இல்லை.

இங்கே எழுதப்பட்டுள்ளவை எல்லாம் இவர்களோடிணைந்த சில சம்பவங்கள் மட்டுமே. அந்தச் சம்பவங்களினூடு, உங்களால் முடிந்தால் அவர்களது மனவுணர்வுகளை மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்; அவர்களது சிந்தனைப் போக்கின் தன்மைகளை உய்த்தறிந்துகொள்ளுங்கள்.

தனிமனித அபிலாசைகளுக்கு அப்பால் – சுயத்தின் சிறைகளை உடைத்துக்கொண்டு அவர்களது சிந்தனையோட்டம் விரிந்தபொழுது – ஈடிணையற்ற தேசபக்தியுடன், தமதுடலோடு தமதுயிரோடு ' தம்மையே ' தியாகம்செய்யத் துணிந்தவர்கள் அவர்கள்.

ஓயாத எரிமலையாக சதா குமுறிக்கொண்டிருந்த நெஞ்சுக்குள் ஆற்ற முடியாத தாகமாக எழுந்துகொண்டிருந்த சுதந்திர வேட்கையைத் தணிக்க. எதுவும் செய்யவும், எங்கேயும் செய்யவும் தயாரான நெஞ்சுரத்தோடு அவர்கள் பயணம் போனார்கள்.

ஒரு மாறுபாடான – முற்றிலும் எதிர்மாறான தள நிலைமைக்குள் நின்று அவர்கள் எவ்விதமாக இவற்றைச் சாதித்திருப்பார்கள் என்பதை, ஆற அமர இருந்து, உள்ளத்தைத் திறந்து சிந்தித்துப் பாருங்கள்.

நெஞ்சு புல்லரிக்கும்; உயிர் வேர்க்கும்.

அவர்கள் – கண்களுக்கு முன்னால் விரிந்து கிடந்த இன்றைய 'நவீன நாகரிகத்தின்' தாலாட்டில்தான் உறங்கினார்கள்; புலிகளின் ஒழுக்க வாழ்வின் உயரிய மரபை மீறிவிடச் செய்யும் சூழ்நிலைக்குள்தான் உலா வந்தார்கள்; இவற்றுக்குள் வாழ்ந்தும் – எதற்கும் அசையாத இரும்பு மனிதர்களாக நெருப்பைக் காவித் திரிய எப்படி அவர்களால் முடிந்தது?

வெளிப்படையாக – அந்த உல்லாச வாழ்வோடு கலந்து சீவித்தபோதும், உள்ளுக்குள் – இதய அறைகளின் சுவர்களுக்குள் – தாயக விடுதலையின் வேட்கையை மட்டுமே சுமந்துகொண்டு, பகைவனின் அத்திவாரங்களைக் குறிவைத்துத் தேடி அலையும் அபூர்வமான நெஞ்சுரம் எங்கிருந்து இவர்களுக்குள் புகுந்தது?

பகைவனின் இலக்கை அழிக்கும் தன் நோக்கினை அடைவதற்காக, தன்னையழிக்கவும் துணிந்த இந்த அதிசய மனவுணர்வை எப்படி அவர்கள் பெற்றார்கள்?

தாயகத்துக்காகச் செய்யப்படும் உயிர் அர்ப்பணிப்புகளில் ஏற்றத்தாழ்வுகள் கிடையாது என்பதுதான் உண்மை.

ஆனாலும், இங்கென்றால் – வெடி அதிரும் கடைசி நொடிப்பொழுது வரை – பரிபூரணமான ஒரு 'போர்ச் சூழ்நிலை' அந்த வீரனது மனநிலையை அதே உறுதிப்பாட்டோடு பேணிக்கொண்டேயிருக்கும். ஆனால் அங்கு......?

அது முற்றிலுமே தலைகீழான ஒரு தள நிலைமை. மானிட இயல்புணர்வுகளைத் தூண்டி – அவற்றுக்குத் தீனிபோட்டு – சுயகட்டுப்பாட்டை இழக்கச் செய்து – மன உறுதிப்பாட்டைச் சிதைத்துவிடக்கூடிய உல்லாசத்தின் மடி அது. அதில் படுத்துறங்கி–பகை தேடி, வேவு பார்த்து, ஒழுங்கமைத்து, குறி வைத்து வெடிபொருத்திப் புறப்பட்டு, மனிதக்குண்டாகி ... எல்லாவற்றையும் தானே செய்வதோடு – பகையழிக்கும்போது தனையழிக்கும் போதும்கூட – தன் பெயர் மறைத்துப் புகழ் வெறுக்கின்ற தற்கொடை, ஒரு அதியுயர் பரிமாணத்தை உடையது. உயிர் அர்ப்பணத்தில் அது உன்னதமானது; ஈடு இணை அற்றது. இந்த வியப்புமிகு தியாக உணர்வை இவர்களுக்கு ஊட்டியது எது?

இவையெல்லாம் – அந்த 'நிழல்' வீரர்களினது பன்முகப்பட்ட தோற்றப்பாட்டின் ஓரிரு பக்கங்கள் மட்டுமே. சொல்லப்படாத பக்கங்கள் நிறைய உண்டு அவை எழுத முடியாத காவியங்கள்; அவர்கள் முழுமையாக எழுதப்படும்போது – படிக்கின்றவர்கள் விறைத்துப் போவார்கள்; ஆன்மா உறைந்து சிலையாவார்கள்.

எப்படி அவர்கள் எதிரியின் உச்சந்தலையில் கூடாரமடித்தார்கள்......? கூடாரமடித்து – அவனது மண்டை ஓட்டைத் துளையிட்டு அவர்கள் உள்ளே நுழைந்தது எப்படி ....? நுழைந்து – அவனது மூளையின் பிரிவுகளையல்லவா அவர்கள் குறிவைத்தார்கள். அது எப்படி ...? எவ்விதமாக இவையெல்லாம் சாத்தியமானது......? எத்தகைய மதிநுட்பத்தோடு நகர்வுகளை மேற்கொண்டு, இந்த அதிஉயர் இராணுவ சாதனைகளை அவர்கள் படைத்திருப்பார்கள்... ? இந்த விவேகத்தையும் புத்திக்கூர்மையையும் இவர்களுக்கு ஊட்டி, அவர்களை நெறிப்படுத்தி வளர்த்தது எது?

உண்மையிலேயே இவையெல்லாம் மேனி சிலிர்க்கச் செய்யும் விந்தைகளேதான்; நம்புதற்கரிய அற்புதங்கள்தான்!

மன ஒருமைப்பாட்டோடு தங்களைத் தாங்களே வழிப்படுத்தி, எங்கள் இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்த அந்தப் புனிதர்கள்; தான் அழியப்போகும் கடைசிப் பொழுதுகளிலும் நிதானத்துடனும் விவேகத்துடனும் செயலாற்றி, பகைவனின் இலக்குகளை அழிப்பதில் மட்டுமே குறியாக இருந்த அந்தக் கரும்புலிகள் ; '' முகத்தை மறைத்து, புகழை வெறுத்து, மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட '' பிரபாகரனின் குழந்தைகள் ...—

இனிப் படியுங்கள் —

## பாசம்



ஒட்டி உலர்ந்து எலும்புக் கூடாகிப் போனாள் அந்தத் தாய்.

இந்த வாட்டமெல்லாம் அவனுடைய சாவுக்குப் பிறகுதான்.

அம்மாவின் சந்தோஷம், நிம்மதி, கலகலப்பு...... அனைத்துமே அவன்தான். அவன் போனதோடு எல்லாமே போய்விட்டது.

இருக்காதா என்ன......?

வறுமையோடு போராடிய அந்தக் குடும்பத்தை வாழவைக்க, இரும்போடு போராட அவன் கம்மாலைக்குப் போன மறக்க முடியாத அந்த நாட்கள் - அம்மாவின் மனசை ஆக்கிரமித்துள்ளன.

அப்போது பத்தே வயதுடைய குழந்தை அவன்.

அம்மாவுக்கு அவன்தான் மூத்தவன். அவனுக்குப் பிறகும் ஐந்துபேர்; பச்சைக்குழந்தைகள்.

எல்லோருடைய துன்பங்களையும் தானே அனுபவித்தான். எல்லாக் கஷ்டங்களையும் தானே சுமந்தான்.

அந்தக் குடும்பத்தின் உயிராக அவன்தான் இயங்கினான்.

ஆனால், அவனுடைய உயிர் அம்மாவிலே தான் இருந்தது.

அம்மா துன்பப்பட்டதைப் பார்த்துப் பொறுக்கமுடியாமல்தான் -

7 மைல் தொலைவிலிருந்த அந்தப் பட்டறைக்கு, பிஞ்சுக்கால்கள் கொப்பளிக்க ஒவ்வொரு நாளும் நடந்தே போய்வந்தான்.

அம்மாவுக்கு உயிர் துடிக்கும்; இதயத்தில் இரத்தம் வடியும்; பின்னேரங்களில் சோர்ந்து வருகிற பிள்ளையை ஓடிச்சென்று அள்ளி எடுத்து, கண்ணீர் கரையக் கட்டியணைப்பாள் அந்தத்தாய்.

'' அவன்தான் எனக்குப் பிள்ளை'' என்கிறாள் அம்மா.

ஓடி அலைந்து வந்து ஓய்ந்திருக்குமொரு பொழுதிலும். அடுப்படியில் அல்லல்படும் அம்மாவுக்குத் துணையாக நெருப்போடு போர் தொடுப்பான் பிள்ளை; அம்மாவுக்குத் துயரம் நெஞ்சை அடைக்கும். →

www.eelamview.com

தன்னையே உருக்கி வார்த்து தங்கச்சிக்காக ஆசையோடு அவன் சங்கிலி ஒன்று செய்து வந்த போது, அடக்க முடியாமல் அம்மா அழுதே விட்டாள்.

அந்தச் சின்ன வயதில் அவன் கஷ்டப்பட்டதைப்போல வேறெவருமே பட்டிருக்கமாட்டார்களாம் - அம்மா சொல்கிறாள்.

இருள் கவிந்த அந்த வீட்டுக்கு விளக்கேற்றியவன் அவன்தான்.

இந்தியர்கள் வந்து அம்மாவையும் பிள்ளையையும் பிரித்தார்கள்; அவன் இயக்கத்துக்குப் போய்விட்டான்.

இப்போது அவனொரு கரும்புலி வீரனாகி -

' புலிகளை அழிக்கக் கங்கணம் கட்டி நின்ற' ஒரு இலக்கை அழிக்கத் தயாராகி நின்றான்.

பகைவனின் பிரதான தெருவொன்றில் அந்த இலக்கு, சரிவந்து பொருந்திய ஒரு ' இளவேனில் ' காலையில் -

தாக்குதலின் இரகசியத் தன்மையையும், அதன் தேவையையும் தெளிவாகப் புரிந்துணர்ந்திருந்த அந்த விடுதலை வீரன் -

கூடவே வந்துநின்று, கட்டி அணைத்து வழியனுப்பி வைத்த அந்தத் 'தளத்தின்' அதிபதியிடம் காதோடு சொல்லிவிட்டுப் போனானாம் -

'' அம்மாவிட்ட மட்டும் சொல்லிவிடுங்கோ ...... அவ ஒருத்தருக்கும் சொல்லமாட்டா......''

☆

## சத்துரு



அவனுக்குரிய தாக்குதல் காலம் துவங்கிவிட்டிருந்தது.

ஏற்கெனவே சில நாட்கள் போய்வந்துவிட்டான்.

தொடர்ந்தும் நாளாந்தம் போய்வந்துகொண்டு இருக்கிறான்.

அன்று காலையிலும்கூட போய்விட்டுவந்துதான் நின்றான்.

தாக்குதல் நடக்கவில்லை.

நடாத்த முடியவில்லை.

இலக்கு வரவேண்டும்; வந்து, நேரே சந்திக்கவேண்டும்; சந்தித்து தாக்கு தூரத்திற்குள் கச்சிதமாக உட்படவேண்டும். அப்போதுதான் துல்லியமாக அடிக்கமுடியும்.

இப்படியாக எல்லாம் சரிவந்து பொருந்துகிற ஒரு சந்தர்ப்பத்தையே அவன் ஒவ்வொரு நாளும் எதர்பார்த்துப் போனான்.

அன்று காலையுங்கூட அத்தகைய சந்தர்ப்பம் நழுவிப் போய்விட்டது.

அன்று மாலையோ, அடுத்த காலையோ, அல்லது மறுநாளோகூட அது நடந்துவிடக்கூடும்.

தான் தங்கியிருந்த வீட்டுக்கு அவன் திரும்பிவிட்டிருந்தான்.

அவர்களுக்கு எதுவுமே தெரியாது.

மதியச் சாப்பாட்டுக்காக மேசையில் அவனும் வீட்டுக்காரர்களும், அமர்ந்தார்கள்; கூடவே அவனது நண்பனொருவனும்.

அம்மா சாப்பாடு பரிமாறும்போது. முட்டை பொரித்துத் தருமாறு அவன் கேட்டான்.

ஒன்றுமே பேசாமல்போன அம்மா முட்டையை அரைஅவியலாக எடுத்து வந்தாள்.

'' முட்டையைப் பொரித்துத் தரச்சொல்லியல்லோ அம்மா நான் கேட்டனான்......... நீங்கள் அவிச்சுக்கொண்டு வாறியள்........''

அந்த அப்பாவி அம்மா சொன்னாள் -

'' பொரிச்சா சத்தெல்லாம் போயிடுமடா தம்பி; அதுதான் அவிச்சு வந்தனான். சத்து இருக்கும்; உடம்பில சேரும்......சாப்பிடு ...''

இதற்கு இரண்டொரு நாளின் பின் இந்தத் தீவையே உலுக்கிய அந்த வீரன் - அருகில் இருந்த நண்பனைப் பார்த்து உதிர்த்த நமட்டுச் சிரிப்பின் காத்திரமான அர்த்தம், மற்றவர்களுக்குப் புரிந்திருக்க நியாயமில்லைத்தான்! ☆

## பணம்



அடுத்த நேரச் சாப்பாட்டுக்கே வழிபற்ற ஒரு ஓலைக் குடிசையிலிருந்து இயக்கததுக்கு வந்தவன் அவன்.

இப்போது ஒரு கரும்புலி நடவடிக்கைக்காகப் போயிருந்தான்.

எதிரியின் ' இதயத்தில்' தான் அவனுடைய இலக்கு.

எனவே, அந்தச் சூழலோடு ஒன்றிப்போய் அதற்கே உரியவனாகத் தன்னை அவன் இனங்காட்டிக்கொள்ளவேண்டியிருந்தது.

அத்தகைய ஒரு தோற்றப்பாட்டைக் கொடுத்தாலேயே தனது நோக்கத்தை அவன் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

அந்தத் தள நிலைமையோடு அவன் சந்தேகமறச் சங்கமிக்க, பணத்தைப் புரளவிடவேணடியிருந்தது.

அந்த ஏழை வீரனது கையினால் செலவு செய்யப்பட்ட பணத்தின் தொகை பெரியது; அதன் நோக்கத்தைப்போலவே.

ஒவ்வொரு சதத்துக்கும் கணக்குக்காட்டவேண்டிய இயக்கத்தில், இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கணக்கற்ற செலவு அது.

அந்தப் பணி அப்படியானது.

அதனால், காட்டப்படாத கணக்குகள்பற்றிக் கேட்கப்படாமலேயே, கேட்கப்படுகின்ற பணம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

வந்துபோகும் நேரங்களில், ' அங்க கொடுத்தன் இங்க கொடுத்தன் ' என்று, அவன் வாயால் சொலவது மட்டுமே - அந்த இலடசக்கணக்கான ரூபாய்களுக்குக் கணக்கு.

' நம்பிக்கை ' மட்டுமே நம்பிக்கையாயிருந்தது.

எல்லா ஏற்பாடுகளும் நிறைவாகிய பின், தாயகத்திலிருந்து அவன் இறுதிப் பயணம் புறப்படத் தயாராகிவிட்ட ஒரு அதிகாலையில் -

அம்மாவிடம் போனான்.

'சொரிந்து' கொண்டிருக்கும் திண்ணையில் ஓரமாக உடகார்ந்திருந்தாள் அம்மா.

சோர்ந்துபோயிருந்தாள்; காலைத் தேநீருக்கு என்ன செய்யலாம் என்றுதான் யோசித்துக்கொண்டு இருந்திருப்பாளாக்கும்.

பிள்ளையைக் கண்டதும் பூரித்துப் போனாள். துடித்துப் பதைத்து எழுந்தோடி வந்து, இரு கைகளாலும் கன்னங்களைத் தடவி அழைத்துப் போனாள்.

எல்லாப் பக்கத்தாலும் பிய்ந்து போயிருந்த ஒரு பனையோலைப் பாயில், நித்திரை கலையாமல் சுருண்டு கிடந்தாள் ஆசைத் தங்கச்சி. பார்க்கவே தெரிந்தது - நிச்சயமாக இரவு அவள் சாப்பிடவேயில்லை.

அருகிலே போய் இருந்து தலையை வருடிவிட்டபோது, நெஞ்சுக்குள் என்னவோ செய்தது.

' எப்போதாவது வருகிற பிள்ளை; எவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்போது வந்திருக்கிறான்...... ஏதாவது செய்து குடுப்பமென்றால்கூட......' அம்மா உள்ளுக்குள் குமுறியிருப்பாள்.

கடைசியாக அம்மாவின் கையால் ஒரு சாப்பாடு. அதற்காகத்தானே பிள்ளையும் பாசத்தோடு ஓடி வந்தான். ஆனால், வீட்டிலே எதுவும் இருக்காது என்பதும் அவனுக்குத் தெரியாததா என்ன?

என்றுமில்லாதவாறு - சட்டைப் பைக்குள்ளிருந்து கொஞ்சம் காசு எடுத்துக் கொடுத்தான். ''நல்ல சாப்பாடாகச் செய்யணை...... சாப்பிடுவம் .....''

அம்மாவுக்கு விசித்திரமாக இருந்தது. ஏனென்றால் - அதற்கு முன் ஒருபோதுமே மகன் அப்படித் தந்ததில்லை.

சமைத்து முடித்து, அம்மா ஊட்டிவிடச் சாப்பிட்டு, அவன் விடைபெறத் தயாரானான்.

கடைசி விடைபெறல்; அம்மாவுக்கு அவன் தந்த முத்தமும் அப்படித்தான்.

வறுமை உந்தித்தள்ளியபோதும் - கேட்கக்கூடாது என்பதை உள்ளுணர்வு சொல்லியது...... என்றாலும் ... தயங்கித் தயங்கி வந்து அந்த ஏழை அம்மா கேட்டாள்.

''இன்னுமொரு ஐநூறு ரூபா தந்திட்டுப் போயேனை......''

அம்மாவை நினைத்தபோது விழியோரம் கசிந்த நீரை அவன் மறைத்திருக்கக்கூடும்.

பரிவோடு கேட்ட அம்மாவுக்கு அவன் சொன்னான்-

''இது நாட்டின்ர காசம்மா ... தரமாட்டன்... கேளாதையணை.''

சொல்லிவிட்டு அவன் போனான்; போய்விட்டான்.

அம்மாவுக்கு எதுவுமே தெரியாது...... பாவம் ! ☆

## பற்று



அது ஒரு துரோகியின் குடும்பம்.

முக்கிய கும்பலொன்றைச் சேர்ந்தவன் அந்தத் துரோகி.

இந்தியர்களின் காலத்தில் பாரதூரமான துரோக வேலைகளை அவன் செய்துகொண்டிருந்தான்.

அவனது இந்தத் துரோக வேலைக்கு, தெரிந்தோ தெரியாமலோ அவனது குடும்பமும் உடந்தையாய் இருந்தது.

தங்களது வீட்டில், 'விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான ' ஆயுதங்கள் புதைத்து வைக்கப்படுவதைத் தடுக்காத அளவுககு அது இருந்தது.

இந்தியர்கள் வெளியேறிய பின் -

அதே ஊரைச் சேர்ந்த எங்கள் வீரனொருவன் தந்த ஆதாரபூர்வமான தகவல்களின்படி - அந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன் - அந்தக் குடும்பமும் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டது.

தேசத்தின் நன்மை கருதி மட்டும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அது.

அவர்கள் எதிரியின் 'பிரதான நகரிற்குப்' போய்விட்டார்கள்; குடும்பமாகவே.

தங்களைப்பற்றிய தகவல்களை எங்களுக்குத் தந்தது யாரென்பது, அவர்கள் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும்.

* * *

→

www.eelamview.com

அந்த எங்கள் வீரன் பின்பொரு நாளில், கரும்புலி நடவடிக்கை ஒன்றுக்குத் தெரிவாகினான்.

தெரிவாகியவன், 'அங்கு' அனுப்பிவைக்கப்பட்டான்.

போய்ச் சேர்ந்தவன், அதற்குரிய அலுவல்களை அங்கு கவனித்துக்கொண்டிருந்தான்.

ஏதோ அலுவலாக அவன் வீதியில் போய்க் கொண்டிருந்த ஒரு காலை -

நூறு, இருநூறு என்று அகப்பட்ட தமிழர்களையெல்லாம் அள்ளிக்கொண்டுபோகும் 'படலத்தில்' எதிர்பாராதவிதமாகச் சிக்குண்டு, அவனும் உள்ளே போகவேண்டிய துரதிர்ஷ்டம் நிகழ்ந்துவிட்டது.

மனதுக்குள் ஆயிரம் போராட்டங்களோடு கம்பிக்கூட்டுக்குள் அவன் நின்றிருந்தவேளை -

அந்த 'நிலையத்துக்குள்' நுழைந்தான் அவன்!

தலைக்குள் மின்னல் வெடித்த அதிர்ச்சி; அது வெளியேற்றப்பட்ட அந்தத் துரோகியின் குடும்பத்தைச்சேர்ந்த ஒருவன்!

மெல்ல நழுவி ஆட்களுக்குள் மறைந்துவிட இவன் முனைவதற்கிடையில் - அவன் எதேச்சையாகக் கண்டுவிட்டான்; இருவரது பார்வைகளும் பயங்கரமாக மோதிக்கொண்டன!

இவனுக்கு என்ன சொய்வதென்றே தெரியவில்லை; அந்த நொடியில் - 'எல்லாமே முடிந்துவிட்டது' என்றொரு விரக்தி உணர்வுதான் ஏற்பட்டது.

அவன் தன்னை நினைக்கவில்லை; தாயகத்தை நினைத்தான். அதற்கு மேலாகத் தான் செய்யவந்த காரியத்தை நினைத்தான். அதற்கும் மேலாக தன்னை 'அனுப்பி வைத்தவர்கள்' தன்னில் வைததிருந்த நம்பக்கையை நினைத்தான்......

அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; அடுத்த கணங்களில் என்ன நடக்கப்போகின்றது என்பதை நினைக்கையில்.........

* * *

யாழ்ப்பாணத்திலிருந்த, அந்த எங்கள் வீரனது வீட்டுக்கு ஒரு கடிதம் வந்தது -

''அவன் இங்க பிடிபட்டு உள்ளுக்க நிண்டவன். நல்லகாலம், நான் கண்டபடியால அங்க கதைச்சு வெளியில எடுத்துவிட்டனான். அவன் இங்க வாய்பாத்துக்கொண்டு திரிஞ்சு திரும்பவும் மாட்டுப்படப்போறான். அவனைக் கவனமாக நிக்கச்சொல்லிவிடுங்கோ.''

* * *

கருப்புலித் தாக்குதலை நிகழ்த்துவதற்கு முன்னர் கூடவந்திருந்த பெரியவர் ஒருவருக்கு அவன் நம்பிக்கையோடு சொன்னானாம் -

''எங்கட போராட்டம் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருத்தன்ர மனச்சாட்சியையும் உலுப்பிவிட்டிருக்குதய்யா; இந்தப் போராட்டம் நிச்சயமாக வெல்லும்!'' ☆

## தேவை



இங்கு அவனுக்கு தாக்குதலுக்கான பயிற்சி வழங்கப்பட்டுத் தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில் -

அங்கு இன்னொரு வீரன் தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான்.

இவன்தான் தாக்குதலுக்கான கரும்புலி வீரன்; ஆனால், அவன்தான் அந்தத் தாக்குதல் 'தளத்தின்' அதிபதி.

பயிற்சிகள் முடிந்து இவன் புறப்படத் தயாரான நேரத்தில், அவனை வழியனுப்பிவைக்கிறபோது, அனுப்பிவைத்தவர் ஒரு விடயத்தை அவனுக்குத் தெளிவுபடுத்தினார்.

''ஏற்கனவே அங்கு ஒருவர் நிற்கிறார்; அவர் தாக்குதலுக்கான ஒழுங்குகளைச் செய்து கொண்டிருக்கிறார். அதாவது, அவர்தான் இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருக்கிறார். உங்களுக்கு எல்லாவற்றையும் காட்டி - விளக்கி - அவர் சொல்லித் தருவார். அத்தோடு - குறிப்பிட்ட இடம் வரையும் வாகனத்தை ஓட்டி வந்தும் தருவார்......

..... இதில் நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால்... ..

...... தாக்குதலைச் செய்யப்போகிறது நீங்கள்தான்; உங்களுக்குச் செய்ய இயலாமல் போனால், அல்லது செய்வது சரிவராமல் போனால் அவர்தான் இதைச் செய்வார்......

ஆனால் - இந்த வேலையை இனிமேலும் நாங்கள் தொடர்ந்து செய்ய வேணும்......''

அவர் சொல்லவந்த விடயத்தை, அவன் பரிபூரணமாக விளங்கிக்கொண்டான்.

* * *

அந்தப் பெரிய நகரத்துத் தெருக்களின் மிகுதியான நெரிசலினால், தாக்குதல் சறுக்கிக் கொண்டே போனது.

அரக்கமுடியாத வாகனப் போக்குவரத்தும், அதிகூடிய சனசந்தடியும் தொடர்ந்து இடைஞ்சலைத் தந்துகொண்டேயிருந்தன.

இலக்கு கண்களில் படும்போது, அவன் இறங்கிக்கொண்டு இவனை அனுப்பிவைப்பான். வேகமாக நகர்ந்து இலக்கை அண்மிக்க முனையும்போது -

ஏதோ ஒரு தடை வரும்.

இப்படியாக தாக்குதல் இழுபட்டுக் கொண்டே போனது.

நெருக்கடியான போக்குவரத்துப் பாதைகளில் வாகனம் ஓட்டிய அனுபவம் பெற்றிராததால், அந்த வீரனும் கூட வெகுவாகச் சிரமப்பட்டான்.

எத்தனையோ நாட்கள் போய்ப்போய்த் திரும்பி வரவேண்டியிருந்தது.

எனவே. இலக்கு நெருங்கிவரும் ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைக்குமானால், திரும்பப் பெற முடியாத பெறுமதி உடையது அது; உடனடியாகப் பயன்படுத்திக்கொண்டுவிட வேண்டும்.

இவ்விதமாக உருவாகியிருந்த ஒரு சூழ்நிலையில் -

அது எதிர்பாராத ஒரு சந்திப்பு -

தேடித்திரிந்த இலக்கு மிக வசதியாக..... மிகமிக வசதியாக எதிர்ப்பட்டது.

ஆனால் வாகனத்திற்குள் இருவருமே இருந்தார்கள். தளபதி ஓடிக்கொண்டிருந்தான்; அருகு இருக்கையில் இவன். இவனிடம்தான 'சுவிச்'.

அவன் இறங்கிக்கொண்டு இவனை அனுப்புவதற்கெல்லாம் அவகாசமே கிடையாது; தாக்கு தூரத்துக்குள் இலக்கு நெருங்கிவிட்டது.

மிக அரிய சந்தர்ப்பம்; தவறவிடவே முடியாது; தவறவிடக்கூடாது.

''அமத்தடா! .....'' - தளபதி கத்தினான்.

ஆனால், அவன் அமத்தவில்லை!

இலக்கு அருகால் கழிந்துபோய்க்கொண்டிருந்தது.

''அமத்தனடா.....'' - தளபதி திரும்பவும் கத்தினான்; கட்டளையிட்டான்!

ஆனால் அவன் அமத்தவில்லை!

இலக்கு, கடந்து - நகர்ந்து - தூர விலகிப் போய்விட்டது.

அவன் அமத்தவேயில்லை.

ஆத்திரமும் கோபமும் பொங்க எரிச்சலோடு தளபதி கேட்டான், ''ஏனடா அமத்தேல்லை......? ...... பயந்துபோனியோ?''

அந்த வீரன் அமைதியாகப் பதிலளித்தான்.

''இந்த வேலை தொடர்ந்தும் நடக்கவேணுமென்றுதான்!''

* * *

இதற்குப் பின்பொரு நாளில். அதே கரும்புலி வீரன், அதே இலக்கை, அதே திட்டத்தின்படி தாக்கியழித்தான். ☆

## தாகம்

அவனுடைய வைகறைப் பொழுதுகள் மகிழ்ச்சியாகத்தான் விடியும்

துடிதுடிப்போடு அவன் நித்திரை விட்டெழுவான்.

முகத்தில் இனம்புரியாத ஒரு பூரிப்புப் படர்ந்திருக்கும்.

விரைந்து விரைந்து பணிகளை முடிப்பான்.

அந்த நாளிலும்கூட குளியலறையில் அரைமணி நேரமாக இருந்து செருப்புத் தேய்த்துக் கழுவுவான்.

குளித்து முழுகிப் புதுப் பொலிவோடு வெளி வருவான்.



உடைகளை அணிந்து நின்று, கண்ணாடிக்கு முன்னால் அழகு பார்ப்பான்.

ஆகக்கூடுதலான நேரத்தை அதில் செலவளிப்பான்.

ஒரு மன்மதன்போலக் காட்சி தருவான்.

நல்ல சாப்பாடாக எடுத்து, நிறையச் சாப்பிடுவான்; சந்தோஷமாகச் சாப்பிடுவான்.

உற்சாகமாக வந்து வண்டி எடுப்பான். கூடவே வந்திருந்த ஐயாவிடம் உவகையோடு சொல்லி விடைபெற்று - புறப்பட்டுப் போவான்.

'' போட்டு வாறனய்யா ....!''

பெரியவருக்கு ஆச்சரியமாயிருக்கும்.

பெருந் துயரோடும் - பிரமிப்போடும், அவன் போவதையே பார்த்துக்கொண்டிருப்பார்; அவன் கண்களிலிருந்து மறையும்வரை.

அதன் பிறகு அவர் காத்துக்கொண்டிருப்பார் -

அது அவனுக்காக அல்ல.

ஆனால், போன காரியம் பிழைத்து அவன் திரும்பி வருவான்; வரும்போது -

இங்கிருந்து புறப்பட்டுப்போகையில் இருந்த உற்சாகம் மறைந்து, முகம் பேயறைந்தது போலிருக்கும்.

அந்தப் பொலிவு செத்துப்போயிருக்கும்.

தாங்க முடியாத சோகம் அவனில மிகையாகத் தெரியும்.

தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்து குந்துவான்.

விசர் பிடித்தவன்போல எழுந்து உடைகளையாமலே போய்க் கட்டிலில் விழுவான்.

இன்னதென்று சொல்லமுடியாத ஒரு ஆற்றாமை உணர்வுக்குள் அவன் சிக்குண்டு தவிப்பது தெரியும்.

பெரியவர் அருகிலிருந்து தடவிக்கொடுத்து ஆறுதல் சொல்லுவார்...; எதற்கு ஆறுதல்...? விசித்திரமான வாழ்க்கைதான்!

மதியம் சாப்பிடான். தேநீர்கூட அருந்தான். இரவும் சாப்பிடாமலே கிடப்பான். அறையை விட்டு வெளியிலேயே வரான். கண்களைக் கூரைக்குள் செருகிவிட்டு வெறித்த பார்வையோடு படுத்திருப்பான்.

அந்த நேரங்களிலெல்லாம், 'தமிழீழத்தின் கரைகளைத் தழுவும் கடலலைகள்' போல தாயக நினைவுகள் அவனைத் தழுவியிருக்கும்.

புரண்டு புரண்டு படுப்பான்; அவனது மன உளைச்சல் அதில் தெரியும். மெல்ல இருள் கவியும் .... பாவம் அப்படியே தூங்கிப்போவான்.

'என்ன மனிதர்கள் இவர்கள்......! எப்படி இவர்களால்...?...' - ஐயாவுக்கு இது பெரிய புதிர்; நம்பற்கரிய அதிசயம்.

மீண்டும் வழமைபோல -
அதே உற்சாகமான விடியல்.
ஆரவாரமான புறப்பாடு - பின்னர்
மனம் இடிந்துபோன திரும்புகை.
கட்டிலில் துவண்டு தலையணையில் கண்ணீர்.
மீண்டும் மறுநாள்......

இப்படித்தான் எத்தனையோ நாட்கள்; சாவும் - பகைவனும் அவனிடம் இருந்து தப்பித் தப்போக, அவன ஏமாற்றத்தோடு திரும்பிக் கொண்டிருந்தான்.

ஆனால், அந்தக் கடைசிநாளில், அவன் மிக உறுதியாகச் சொல்லிவிட்டுத்தான் போனான் -

''நான் போறனய்யா;..... இண்டைக்குப் பிழைக்கவே மாட்டுது......''

அவன் மறையும்வரை ஐயா பார்த்துக் கொண்டே நின்றார்.


அவன்வரவில்லை; அந்தச் செய்தி வந்தது! ☆

(13ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# வரலாற்றைப் படைத்த வரலாற்றுத் தாக்குதல்

1983 யூலை 23ஆம் திகதி இரவு திருநெல்வேலியில் நடந்த வெற்றிகரமான தாக்குதலைப் பற்றி, அத்தாக்குதலில் பங்குவகித்த கேணல் கிட்டு அவர்கள் எழுதி 'களத்தில்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை, இங்கே மறுபிரசுரம் செய்கின்றோம்.



கேணல் கிட்டு
சதாசிவம் கிருஷ்ணகுமார்
வல்வெட்டித்துறை.
வீரமரணம்: 16-01-93

1983 ஆம் ஆண்டு யூலை 23 ஆம் திகதி இரவு 11 மணியளவில், திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற 'டெலிக்கா வான்' வந்துகொண்டிருக்கிறது. 'வானை' செல்லக்கிளி செலுத்த, அவனை அடுத்து கையில் எஸ். எம். ஜியுடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான் 'வானி'ன் பின் பகுதியில் தம்பி (தலைவர்) மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி 'வான்' தபால்பெட்டிச் சந்தியில் நிற்க, எல்லோரும் கீழே இறங்குகிறோம்.

அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும்.

'வான்' அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க, அயல்சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத் தொடங்க, விக்ரரும் செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களததில் உரக்கக் கதைத்தபடி றோட்டிலே நடக்கத் தொடங்க, வெளியே எட்டிப் பார்த்த தலைகளைக் காணவில்லை. வெளிச்சம் போட்ட இருவீடுகளின் விளக்குகளும் அணைந்துவிட்டன; யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்துவிட்டனர்.

முன்பு திட்டமிட்டபடி அப்பையா அண்ணை, விக்ரர், செல்லக்கிளி மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும் செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர். கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகையில் வெடிமருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும் என்னுடைய அனுபவப்படி தாங்க முடியாத தலையிடி. அதன்பின் கிடங்கு வெட்டி (இறுகப் போடப்பட்ட தார் றோட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகுவானதல்ல), இவற்றையும்விட தாக்குதலின்போது சண்டையும் போடவேண்டும்.

எமது தகவலின்படி சுமார் நள்ளிரவு 12 மணியளவில், பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு 'ட்ரக்' வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம் ஜீப்பில் 4 இராணுவத்தினரும் 'ட்ரக்'கில் 10 பேர் அளவிலும் வருவார்கள் எனத் தகவல். எனவே, யாழ். பல்கலைக்கழக பின்வீதி பலாலி றோட்டைச் சந்திக்கும் இடமாகிய தபால்பெட்டிச் சந்தியில் கண்ணிவெடி புதைத்து, இரண்டாவதாக வரும் வாகனத்துக்குக் கண்ணிவெடியால் தாக்க, முன்னால் வரும் வாகனத்தை சுட்டு மடக்குவது என்பது நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு 'வோக்கி ரோக்கி'- அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்படுத்திக்கொண்டிருக்கையில், மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து, தத்தமக்கு உரிய இடத்தைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது கண்ணிவெடியைப் புதைத்துக்கொண்டிருக்கையில் விக்ரர் விலகி, தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனைவிட உயரமாக இருக்க, பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காகத் தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு, அந்தச் சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையைச் சீர்படுத்திக் கொள்கிறான் துப்பாக்கியைத் தோளில் வைத்து இயக்கிப்பார்க்கும் விதங்களையும், துப்பாக்கியை இலகுவாக இயக்க முடியுமா என்பதையும் சரிபார்த்துக் கொள்கின்றான்.

## கேணல் கிட்டு

தம்பி தபால்பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்துத் தாக்குதலுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில், 'வோக்கி' செல்லக்கிளியைக் கூப்பிடுகின்றது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாகத் தன் வேலையை முடித்துக்கொண்டு, மீதி வேலையை அப்பையா அண்ணையிடம் விட்டுவிட்டு, தனது நிலைக்குச் செல்லுகின்றான் அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்கவைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

*'வான்' அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க, அயல்சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத்தொடங்க, விக்ரரும் செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரத்துக் கதைத்தபடி றோட்டில் நடக்கத்தொடங்க, வெளியே எட்டிப்பார்த்த தலைகளைக் காணவில்லை.*

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது; அப்போதுகூட வேலை முடியவில்லை. விக்ரர், ''அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ'' என்று கத்த, அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக்கொண்டிருக்கையில், 'வோக்கி மீண்டும் அலறியது.

''அம்மான் நாங்கள் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்தான். முன்னுக்கு ஜீப் பின்னால் ட்ரக்'' என்று அறிவித்தது. எனவே அம்மான் 'ட்ரக்' வண்டிக்கு கண்ணிவெடியால் தாக்க, முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில், வெளிச்சங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டுவிட்டு, பின்னால் வரும் 'ட்ரக்' வண்டியை கண்ணிவெடியால் தாக்கி, அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். 'ட்ரக்' வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களைச் சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண்டுபவர்களைக் கவனிக்க, தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்துகொண்டிருந்தன. நான் எட்டிப் பார்த்தேன். முன்னால் இருவிளக்குடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையிலான இடைவெளியைக்கொண்டு அது ஜீப் என்று புரிந்துகொண்டேன். அடுத்து 'ட்ரக்'. மெல்ல வந்துகொண்டிருக்கின்றன.

நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டு இருக்க, ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்தபோது, கண்ணிவெடி வெடிக்கவைக்கப்பட்டு விடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப் வண்டியை விட்டு, பின்னால் வரும் 'ட்ரக்' வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம் இன்று வரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்கவைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்கவைத்த செல்லக்கிளி அதை விளக்கவில்லை; சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத் தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை; எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை. என்னுடைய ஜி 3யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். ஜீப்பின் விளக்கு உடைந்ததும், பின்னால் நின்ற 'ட்ரக்'கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருர்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு, அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும்போது விக்ரர் தன் தலையைச் சுவருக்கு உள்ளே இழுத்துக்கொண்டு நிற்கையில், மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடி வருவது தெரிய, அவனைக் குறிவைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் ஓடி வந்தவனின் உடலிலே பாய அவன் தூக்கி எறியப்படுகின்றான்; அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான். இன்னுமொருவன் ஓடிவர அவனை நோக்கிச் சுட, அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட, குண்டுகள் அவனை விழுத்தவில்லை; ஆனால் காயப்படுத்தின. ஆனாலும் அவன் காயத்துடன் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடினான். விக்ரர் அவனை திரும்பச் சுட்டான் வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை; மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட, ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்தச் சுவாலையை மையமாகவைத்துச் சில வேட்டுகளைத் தீர்த்தான். பின்பு அது அடங்கிவிட்டது. மேலும் ஒருசில உருவங்கள் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்றுவிட்டது. விக்ரருக்கு விளங்கியது போடப்பட்ட குண்டுகள் முடிந்துவிட்டது; குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைச்சட்டத்தை மாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னால் வந்த 'ட்ரக்' வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். பெரியவெளிச்சத்தையும் ஜீப் மேலே தூக்கிஎறியப்பட்டதையும் கண்ட

www.eelamview.com

சாரதி தன்னை அறியாமலே 'பிரேக்கை' இறுக அழுத்தினான். ஏன், பிரேக்அழுத்தும் பிதிமீது ஏறிநின்றான் என்றே கூறலாம்.

'ட்ரக்' பிரேக் போட்டு நின்றதும் 'ட்ரக்'கின் பின்புறத்தில், இராணுவத்தினர் தம் துப்பாக்கியைத் தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழத்தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டுமட்டும் சுவரின் மறைவிலே குந்தி இருக்க, இரு வாகனங்களும் அவரைத் தாண்டுகின்றன. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப்வண்டி கண்ணிவெடியை நெருங்கிக்கொண்டிருக்க, 'ட்ரக்' அவருக்கு சரியாக 20யார் தூரத்தில் சென்றுகொண்டு இருக்கக் கண்ணிவெடி வெடித்தது. 'ட்ரக்' அவருக்கு மிகக்கிட்ட—கையில்எட்டிப்பிடிக்குமாப்போல்தூரத்தில் – பிரேக்போட்டதால் குலுங்கி நிற்க, எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய ஜி 3 ஏ 3 வெடிக்கத் தொடங்கியது,

'ட்ரக்'கின் இருக்கையிலிருந்து இராணுவத்தினர் எழுந்தும்எழாததுமான நிலையில், தம்பியின் ஜி 3 வெடிக்கத் தொடங்கியது.

ஜி 3 ஏ 3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள், தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத் தொடங்கின.

சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத் திருப்பம், தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்கவைத்துவிட்டது.

---

*இதேநேரம் தம்பி (தலைவர்) தனியே நிற்பதை உணர்ந்து, ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் 'தம்பியிடம்ஓடு'' என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர். ஆனால் ரஞ்சனும் சகபோராளியும் தம்பியைச் சென்றடைந்தபோது, ட்ரக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும் தம்பியின் தனி ஒரு ஜி3 ஓயவைத்துவிட்டது.*

---

ஆனால் இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத்துரிதமாகவும் குறிதவறாமலும் துப்பாக்கியைக் கையாள்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம், 'ட்ரக்'கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

'ட்ரக்' மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுடமுடிகிறது. வெடியின் அதிர்வில் தெருவிளக்குகள் அணைந்துவிட்ட போதிலும், மிகக் கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு; இராணுவத்தினரைப் பொறுத்தவரை தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத் தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால்– ஆற்றலால் – வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்தபோதிலும், இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் 'ட்ரக்'கிலிருந்து கீழே குதித்து சில்லுக்குள் புகுந்துகொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத்தெறித்துக்கொண்டிருந்தன இத்துடன் 'ட்ரக்'கின் முன்புறத்திலிருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் ஜி3 இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால், தம்பிக்கு உதவிக்கு எவருமேயில்லை. நாம் எமது திட்டத்தின்படி ஜீப்பை முன்னே விட்டு, 'ட்ரக்' வண்டிக்கு கண்ணிவெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அத்திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போ தனியாகவே 'ட்ரக்'கை சமாளிக்கவேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டுவிட்டார். இதேநேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்த விக்ரர், தனக்கு 20 யார் பின்னே 'ட்ரக்' நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை 'ட்ரக்கை' நோக்கித் திருப்பினான்– 'ட்ரக்'கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான்.

அப்போதுதான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது சாரதி தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து, வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன் நோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து, ''பஷீர் காக்கா'' 'றிப்பீட்டரால்' ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். 'றிப்பீட்டரில்' தோட்டாக்கள் முடியும்போது, அதை மாற்றித் திருப்பித் தாக்கும்படி சொல்லி உற்சாகமூட்டிக்கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த அப்பையாண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் எஸ். எம். ஜியுடன் ஓடிவந்தான். ''சுடு'' என்ற அப்பையாண்ணை உடனே, ''கவனம், எங்கட பெடியளோ தெரியாது. பார்த்துச் சுடு'' என்றார். 'றிப்பீட்டர்' சத்தம் ஓய, வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது எஸ் எம். ஜியை அப்பையாண்ணை ஓடிவந்து எடுத்துக் கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்கு தலைமைதாங்கிய லெப்ரினன் என்பதைப் பின்னர் தெரிந்துகொண்டோம். அவனது விசேட இராணுவ பட்டிகள் அதை உறுதிப் படுத்தின.



லெப். செல்லக்கிளி
(ச. செல்வநாயகம்)
கல்வியங்காடு.
வீரமரணம்: 23 - 7 - 83

இதேநேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து, ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் ''தம்பியிடம் ஓடு'' என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.

ஆனால் ரஞ்சனும் சகபோராளியும் தம்பியைச் சென்றடைந்தபோது, 'ட்ரக்'கிலிருந்து அனைத்து துப்பாக்கிகளையும். தம்பியின் தனி ஒரு ஜி 3 ஓயவைத்துவிட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ்வீரச்செயலை முடித்துவிட்டு அமைதியாக, வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து, முடிந்த ரவைக்கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக்கொண்டிருந்தார் தம்பி.

மதிலேறிக்குதித்த ரஞ்சனும் மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக்கண்டு, ஆயுதத்தைத் தயார்நிலைக்குக் கொண்டுவந்து, ''யாரது'' என்றவாறு முன்னே வந்தனர்.

''அது நான்ராப்பா'' என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி, ''இங்கே எல்லாம் முடிந்தது; உங்கடைபக்கம் எப்படி?'' என்றார். ''அண்ணை எங்கடை பக்கம் பிரச்சினையில்லை'' என்றார்ரஞ்சன்.

''இங்கையும் எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால் எனக்குச் சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை. காயப்பட்டிட்டாங்களோ தெரியவில்லை. வா பார்ப்போம்'' என்றவாறு, தன் பிரியத்திற்குரிய ஜி3யைத் தூக்கிக்கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்குமுன், ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று, எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு 'ட்ரக்'கின்கீழ் விழுந்து வெடித்து, எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன்பின் மதிலேறிக் குதித்து றோட்டைத்தாண்டி, புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான்; அங்கு புலேந்திரன், சந்தோசத்தைக் காணவில்லை. ''எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச்சேகரியுங்கள்'' எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைபார்த்து, ''அண்ணை அவன் அநுங்குகிறான்.'' மீண்டும் ஒருமுறை முழங்கிய ஜி3 அவனின் அநுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இதன்பின், 'ட்ரக்கை' நெருங்கி ஆயுதங்களைச் சேகரிக்கத் தொடங்கினர். தம்பி எதற்கும் என்று வெளியே கிடந்த இராணுவத்தினரின் தலையில் இறுதி அத்தியாயத்தை ஜி 3 ஆல் எழுதிவைத்தார். ஜி 3 யின் வேகம் மண்டையோடுகளைப் பிளக்க வைத்தது.

இதேநேரம், பல்கலைக்சழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவ வீரனை இன்னோர் போராளி துரத்திச்சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்துவிட்டு, பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் 'ட்ரக்'கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம்.

''கரையால் வாருங்கள்'' என்ற தம்பியின் குரல் எம்மை வரவேற்றது.

எல்லோரும் தம்பியை சூழ்ந்துகொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் பொன்னம்மான் அதிக மகிழ்ச்சியுடன், இறந்து கிடந்த இராணுவத்தினரின் 'ஹெல்மெட்'டைத் தலையில் போட்டுக்கொண்டு, 'ட்ரக்'கின் கீழே இறந்து கிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களைத் தேடி எடுத்துக்கொண்டான்.

---

*விக்ரரும் புலேந்தீயும் செல்லக்கிளி அம்மான் நின்ற கடையின்மேல் ஏறினர். ''டேய் அம்மானுக்கு வெடிவிழுந்திட்டுது'' என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது. எல்லோரும் அங்கே ஓட நான் 'வானை' எடுத்து வந்தேன்.*

---

இத் தாக்குதல் இரவுநேரமாதலால் எம்மையும் இராணுவத்தினரையும் வேறு பிரிக்க நாம், 'ஹெல்மெட்'டைத்தான் குறியீடாகப் பாவித்தோம். 'ஹெல்மெட்'டுடன் ஓர் உருவம் நகர்வதைக்கண்ட தம்பி உடனடியாகத் துப்பாக்கியைத் தயார்நிலைக்குக் கொண்டு வந்து ''யாரது'' என்றுவினாவ அம்மான், ''அதுநான் தம்பி'' என்றவாறு தன் தவறை உணர்ந்து 'ஹெல்மெட்'டைக் கழற்றினார்

பொன்னம்மானைச் செல்லமாகக் கண்டித்தவாறு எல்லாரையும் சரிபார்க்குமாறு தம்பிபணிக்க, ''அம்மானைக்காணவில்லை'' என்று, விக்ரர் கத்தினான். விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர்: ''டேய் அம்மானுக்கு வெடிவிழுந்திட்டுது'' என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது; எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும்போது அம்மானின் உடல் குளிர்ந்துவிட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட, றெஜி ஆயுதங்களைப் பொறுக்கினான்.

வான் புறப்படத் தொடங்க, மழையும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது எமக்கு. செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த, வான் எமது முகாம் நோக்கிப் பறக்கிறது. ○

www.eelamview.com

# உணவுக்காக ஒரு 'ஒப்பரேசன்'

**1988 -** மணலாற்றுக் காடு.

30, 000 இந்தியச் சிப்பாய்கள் இட்ட இராணுவ முற்றுகையை முறியடிக்க ஒரு சில ஆயிரம் புலிவீரர்கள், தலைவரின் நேரடிக் 'கொமாண்டின்' கீழ் ஜீவமரணப் போராட்டத்தை நடாத்திக்கொண்டிருந்த நேரம்.

காட்டிற்குள் இருந்த புலிவீரர்களது பல முகாம்களுக்குள் இந்தியப் படைகள் புகுந்துவிட்டன.

ஒருபுறம் போர் நடைபெற்ற அதே வேளை, மறுபுறம் அவசர அவசரமாகப் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டன; புதிய கிணறுகள் வெட்டப்பட்டன.

தலைவரது முகாமுக்குள்ளும் இந்தியப்படை புகுந்துவிட்டது. தலைவரும் இடம் மாறி - இடம்மாறிப் போரை வழிநடாத்திக் கொண்டிருந்தார். காடெங்கும் இந்தியப் படைகள் நின்று எமது வெளித் தொடர்புகளைத் துண்டித்ததாலும், எமது முகாம்கள் பலவற்றை இந்தியப் படைகள் பிடித்துவிட்டதாலும், காட்டுக்குள் உணவுத் தட்டுப்பாட்டால் பெரும் நெருக்கடி உருவானது.

காட்டுக்குள் இருந்த பல உணவுச் சேமிப்பு நிலையங்களை இந்தியப் படைகள் அழித்துவிட்டன. அவசர நிலைகளின்போது பயன்படுத்தும் நோக்குடன் சில இரகசிய உணவுச் சேமிப்பிடங்கள் முன்னரேயே காடெங்கும் நிறுவப்பட்டிருந்தன. அதாவது, பாரிய மரங்களின் உச்சியில் உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில் அந்த உணவு வைப்பகங்கள் மறைந்திருந்தன.

இலுப்பை மரத்தில் குடியிருக்கும் வெளவால்களைப் போல அந்த நேரத்தில் மணலாற்றுக் காட்டுக்குள் இந்தியப்படை முகாம்கள் இருந்தன.

இப்படியான படைமுகாம்கள் சிலவற்றுக்குள் இரகசிய உணவு வைப்பகங்களைத் தாங்கிநிற்கும் மரங்களும் இருந்தன. அந்த மரங்கள் இந்தியப்படை முகாம் எல்லைகளுக்குள் இருந்தாலும் இந்தியர்கள் அதைக் கண்டுபிடிக்கவில்லை.

சண்டை தீவிரமடைந்தது.

உணவு இல்லாமலே போகும் நிலை உருவானது.

சிறிதளவு அரிசியையும், சிறிதளவு பருப்பையும் தவிர வேறொன்றும் இல்லை; உப்பு உட்பட. அரிசியையும் பருப்பையும் ஒன்றாகப் போட்டு அவித்து, தலைவர் உட்பட எல்லோரும் அதையே உண்டு பசியாற்றினர்; பசியாற்றினர் என்பதைவிட போராடுவதற்காக உண்டனர் என்பதே பொருத்தமாக இருக்கும்.

உப்பில்லாப்பண்டம் குப்பையில் என்பர் - 'செக்மேற்'றின் போது மணலாற்றுக் காட்டுக்குள் நிற்காதவர்.

இவ்விதம் திருக்குறள் பாணியில் அந்தச் சூழலை விளங்கப்படுத்தலாம். உணவு இல்லை என்பதற்காக இந்தியப் படைகளிடம் மண்டியிட முடியாது; அதேவேளை உணவு இல்லாமல் போர் புரியவும் முடியாதே.

நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று தலைவர் சிந்தித்தார். எப்படியாவது உணவைப் பெற்றேயாக வேண்டும் என்று அவர் முடிவெடுத்தார்.

அப்போது தலைவர் அவர்கள் ஒரு தாக்குதற் திட்டத்தைத் தீட்டி, அதற்கான தந்திரோபாயங்களையும் வகுத்துக்கொண்டார்.

இது ஆயுதங்களைக் கைப்பற்றி, எதிரிப்படையினரைக் கொல்வதற்கான திட்டம் அல்ல.

உணவுப் பொருட்களை மீட்டெடுத்து - போராளிகளுக்கு உணவூட்டுவதற்கான ஒரு தாக்குதல்.

அந்தத் தாக்குதல் திட்டத்திற்கு பெயரெதுவும் இடப்பட்டிருக்கவில்லை. ஆனால் 'ஒப்பரேசன் அரிசியும் - பருப்பும்' என்று பெயரிட்டிருக்கலாம். இந்தத் தாக்குதல் வெற்றியில் தான் பட்டினியை எதிர்நோக்கியுள்ள பல நூறு புலிவீரர்களது உயிரே தங்கியிருந்தது. தலைவர் தீட்டிய திட்டத்தை அவரே போராளிகளுக்கு விளக்கினார்.

திட்டம் இதுதான்.

காட்டிற்குள் இந்தியப்படை அமைத்திருக்கும் ஒரு தற்காலிக படைமுகாம் ஒன்றில் உள்ள ஒரு காவலரணிற்கு அருகில் இருக்கும் மரத்தின் மேல், இரகசிய உணவு வைப்பகம் ஒன்று இருந்தது.

அதைச் சண்டையில்லாமலே வெற்றிகரமாக எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

அதெப்படி!

பகலில் சென்று மரத்திலேறினால் அரிசி மூடையோ, பருப்பு மூடையோ வராது; உடல் மூடைதான் வரும். குருவி சுடுவதுபோல காவலரணில் இருக்கும் இந்தியச் சிப்பாய் சுட்டுத் தள்ளிவிடுவான்.

அப்படியாயின் இரவு முயற்சிக்கலாமே!

கன்னங்கரிய வனஇருளில் மரங்களால் நிறைந்த சமுத்திரத்துக்குள் குறித்த மரத்தைத் தேடிப்பிடிப்பது எப்படி?

இந்தச் சிக்கலை வெற்றிகொள்வதற்கான தந்திரோபாயத்தையும் தலைவரே வழங்கினார்.

முதலில், இருளத் தொடங்கு முன் நீளமான ஒரு கயிற்றுடன் ஒரு போராளி இரகசியமாக ஊர்ந்துசென்று. குறித்த உணவு வைப்பக மரத்தின் அடியைச் சுற்றி கயிற்றைக் கட்டிவிடவேண்டும்.

கட்டியபின் சென்ற பாதை வழியே கயிற்றை இழுத்துக் கொண்டு திரும்பி வந்து, படைமுகாம் எல்லைக்கு வெளியில் உள்ள ஒரு மரத்தில் கட்ட வேண்டும்.

இரவாகியபின் முதலில் இருவர் கயிற்றைப் பிடித்துப் பிடித்துச் செல்வதன் மூலம், உணவு மூடைகள் இருக்கும் மரத்தை இனங்கண்டுகொள்ள முடியும்.

பின்னர் மெதுவாக மரத்திலேறி, சத்தமில்லாமல் சிறுசிறு பொதிகளாக மூடைகளைப் பிரித்துக்கட்டி, நீண்ட கயிற்றின் மூலம் சந்தடியில்லாமல் கீழே இறக்கிவிடவேண்டும். இறக்கப்பட்ட பொதிகளைத் தூக்கியவாறு, கயிற்றை வழிகாட்டியாகக்கொண்டு ஏனைய போராளிகள் வெளியே



கொண்டுவரவேண்டும். இவ்விதம் வெற்றிகரமாக கொண்டு வந்தும்விட்டனர்.

இந்தத் திட்டத்தின்படி போராளிகள் அனைவருக்கும் சில நாட்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் கிடைத்துவிட்டன.

செக்மேற்றை முறியடிக்க நடந்த சண்டைகளின்போது இடம்பெற்ற பல்வேறு சாதனைகளில், நிச்சயமாக இதுவும் ஒன்று. ○

# றுவாண்டா: உலகை உலுக்கும் படுகொலைகள்

உலகப் பத்திரிகைகள் அனைத்திலும் இன்று 'றுவாண்டா' தேசத்தில நடைபெறும் படுகொலைச் சம்பவங்களே பிரதான செய்திகளாகிவிட்டன. ஆனாலும் இந்த நாட்டில் ஒரு அமெரிக்கப் பெண்மணி கொறில்லா குரங்குகள் தொடர்பாக நடாத்திய ஆராய்ச்சியும் - The Gorrilla in the mist என்ற பெயரில் அது திரைப்படமாக வெளிவந்த 1985 ஆம் ஆண்டுக் காலத்திலேயே 'றுவாண்டா' என்ற நாட்டின் பெயரை உலகமக்கள் அறிந்துவைத்திருந்தனர்.

றுவாண்டா நாட்டைப்பற்றி தெரிந்துகொள்ள விரும்பினால், அதன் அருகில் உள்ள புருண்டி நாட்டைப்பற்றியும் சிறிது அறிந்து வைத்திருக்க வேண்டும்.


றுவாண்டா, புருண்டி இரண்டும் நிலங்களால் முற்றுகையிடப்பட்ட ஆபிரிக்காவின் இரு பிள்ளைகள்; வரலாறு, மொழி, இனத்துவம் ஆகியவற்றில் பொதுவானதன்மைகள் பலவற்றைக்கொண்ட இரண்டு நாடுகள்.

ஆனாலும் கடந்த 28 வருட காலத்தில் இந்த இரு தேசங்களிலும் நடந்த இனக்கலவரங்களில் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுவிட்டனர்.

இரண்டு நாடுகளிலும் பெரும்பான்மை மக்களாக இருப்பவர்கள் குட்டு (Hutu) இன மக்களாவர். அதேபோல இரு தேசங்களிலும் சிறுபான்மையினராக இருப்பவர்கள் 'டுட்சி' இன மக்களாவர்.

சிறுபான்மையினராக இருந்தபோதும் 'டுட்சி' இனத்தின் நிலப்பிரபுக்களே, பலநூற்றாண்டுகளாக, இரண்டு நாட்டின் அரசியலிலும் அதிகாரம் செலுத்தி வந்தனர் என்பது குறிப்படத்தக்கது.

1899ஆம் ஆண்டு இந்த இரண்டு தேசங்களையும் கைப்பற்றிய ஜேர்மனி, முதலாம் உலகமகாயுத்தம் முடியும் வரை -1917 வரை - தனது




காலனி நாடுகளாக வைத்திருந்தது பின்னர் பெல்ஜிய அரசிடம் இந்த இரு தேசங்களின் ஆட்சியும் கைமாற்றப்பட்டது. காலனித்துவ ஆட்சி நடைபெற்றபோதிலும் சிறுபான்மையின மக்களான 'டுட்சி' இனத்தவரின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது பிரித்தாளும் தந்திரத்தைக் கடைப்பிடித்த காலனித்துவ அரசுகளுக்கு இது வசதியாகிப் போய்விட்டது.

ஆனால் 1959ஆம் ஆண்டு றுவாண்டாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதும் அங்கே பெரும்பான்மை இனத்தவர்களான 'குட்டு' மக்கள். சிறுபான்மை 'டுட்சி' இன ஆதிக்கத்திற்கெதிராக கிளர்ச்சி செய்தனர். இந்தக் கிளர்ச்சியின் போது ஏறத்தாழ இரண்டு இலட்சம் 'டுட்சி' இன மக்கள் உயிரிழந்திருந்தனர்.

முடிவில 'குட்டு' இன மக்களின் பிரதிநிதிகளிடம் ஆட்சிஅதிகாரம் சென்றடைந்தது.

(இ ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

## பாடல்



இயந்திரத்தின் மெல்லிய ஒலியைத் தவிர, மற்றும்படி நிசப்தமே வாகனத்தை நிறைத்திருந்தது.

'நீண்ட பயணம்' போகப் புறப்பட்டுவிட்ட ஒரு கரும்புலியை வழியனுப்பச் சென்றுகொண்டிருந்த ஒரு பயணம்.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்; ஆனால் சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன.

அந்தக் கரும்புலியின் மனத்திரையில், கொடூரமான அந்தக் காலம் -

தெருத்தெருவாகப் பிணங்கள்; யுத்த டாங்கிகளின் இரும்புச் சங்கிலிகளால் நெரிக்கப்பட்ட உடலங்கள்; கற்பழிக்கப்பட்ட பெண்கள்; சீர்குலைந்து போயிருந்த தமிழீழம்... எல்லாமே வந்துபோயின.

அவற்றை நினைக்க நினைக்க தனக்குரிய அந்தத் தாக்குதல் திட்டம் மனதுக்குள் விரிந்தது; செயல்முறையில் சொல்லித் தரப்பட்டதையே. அந்தக் கரும்புலி திரும்பத் திரும்ப மனப்பாடம் செய்துகொண்டிருந்தது.

எந்தப் பிசகுமில்லாமல் அதனைச் செய்து முடிக்கவேண்டும் என்ற வேட்கையே அந்தக் கரும்புலியை ஆட்கொண்டது; அதனைச் சுற்றியே அந்தக் கரும்புலியினது நினைவுகள் வலம் வந்துகொண்டிருந்தன.

அதேபோலவே -

துல்லியமான வெற்றியாக அது நிறைவேற வேண்டுமென எண்ணங்கள் ஓட - அந்தக் கரும்புலியை வழியனுப்பச் சென்றுகொண்டிருந்த போராளியும் வாகனத்தை ஓட்டிக்கொண்டேயிருந்தார்.

சிந்தனை வயப்பட்டிருந்த நீண்ட அமைதியினால் அருகில் யாருமற்றது போன்ற தனிமையுணர்வு எழ - தானறியாமலேயே - ஒரு பாடலை அந்தப் போராளி உரத்துப் பாடிவிட்டார்.

பின்னாலிருந்து சிரிப்பொலி பரவி வாகனத்தை நிரப்பியபோது., சுதாகரித்துக்கொண்டு அவர் நிறுத்திக்கொண்ட அந்தப் பாடல் -

''பிரபாகரன் நினைத்தது நடக்கும் - அவன், புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்...''

அந்த வாகனப் பயணம் முடிந்து , 'எல்லோரும்' வழியனுப்பிவைக்க அடுத்த பயணம் தொடர்ந்து, போய்... அன்றொரு நாளில் அந்தக் கரும்புலி போயேவிட்டது.

எங்கள் மண்ணுக்கு ''இருண்ட நாட்களை''த் தந்த போராட்டத்தின் பெரியதொரு தடைக்கல்லை, அந்தக் கரும்புலி கட்டி அணைத்துத் தகர்த்த போது -

எங்கள் போராட்டத்தின் 'வரலாற்றுப் பெருமை' ஒன்றுக்கு அது உரித்துடையதாகியது.

அடுத்து வந்த நாட்களில் -

அந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த 'அந்த ஒரு' வீரன், அங்கிருந்தபடி செய்தி அனுப்பினான் -

கடைசி நாள் வரை அதே பாடல்தானாம் அந்த கரும்புலியின் வாயில் -

''பிரபாகரன் நினைத்தது நடக்கும் - அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்.'' ☆

"வரையப்படாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் இந்தக் கரும்புலி வீரர்கள் பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்குகிற போதும் - அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக, என்றும் அழியாப் புகழ் பெற்று வாழும்.

ஆளுக்கும் பெயருக்கும் அப்பால் - முகத்தை மறைத்து, புகழை வெறுத்து - எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த இந்த வரலாற்று நாயகர்களுக்கு, நான் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன்."

- தலைவர்

## மானம்

தாக்குதலுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒருவன் நிச்சயிக்கப்பட்டான்.

வேவு அறிக்கைகளின் அடிப்படையில் - தாக்குதலுக்கு அவன் தயார்ப்படுத்தப்பட்டான்.

விளக்க வகுப்புகள் நடந்தன.

செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

சொல்லிக்கொடுத்தவற்றை அவன் சிறந்த முறையில் பிடித்துக் கொண்டான்.

பல்வேறு தேர்வுகளிலும் தேறிய அவனுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அவன் தாக்குதல் 'தளத்துக்கு' அனுப்பப்பட்டான்.

அங்கும் அவனுக்கு தாக்குதல் கேந்திரம் நேரடியாகக் காட்டி விளங்கப்படுத்தப்பட்டது -

அது பகைவனின் 'மூளை.'

தமிழர்களுக்கு எதிரான போரின் 'மையம்' அதுதான்.

எனவே, அந்தத் தாக்குதல் முக்கியத்துவம் மிக்கது.

ஆனால், எல்லா ஏற்பாடுகளும் நிறைவாகியிருந்தபோது - கடைசி நேரத்தில் - தாக்குதலுக்கு என்று சென்றவன் தளம்பிவிட்டான்; நம்பிக்கையோடு தயார்ப்படுத்தப்பட்டவன் பிசகிவிட்டான்.

எதிரி உசாரடைந்துவிடுவானானால் எல்லாமே பாழ்.



எனவே திட்டத்தைத் தாமதப்படுத்த முடியாது. இன்றியமையாத தேவையாக எழுந்தது.

அப்படியானால் ஆள்......?

திரும்பிப் போய், புதிதாக ஒருவனைத் தயார்ப்பண்ணி, கூட்டிவந்து ......அது சாத்தியமே இல்லாத சமாச்சாரம்.

அந்தத் தர்மசங்கடமான நிலையில் -

வேறு ஒரு வேலையின் பொருட்டு அங்கு போய் நின்ற இன்னொரு வீரன் அதனைத் தான் செய்வதாக முன்வந்தான்.

உடனடியாகத் திட்டம் விளங்கப்படுத்தப்பட்டு, அவன் புறப்படத் தயாரானான் -

புறப்படும்போது - வாகனத்தில் ஏறிக்கொண்டு - அந்தத் 'தளத்தின்' அதிபதியிடம் உணர்ச்சிமயமான முகத்தோடு சொல்லிவிட்டுப் போனான் -

''தமிழங்களாகப் பிறந்தவங்களுக்கு கொஞ்சமெண்டாலும் ரோசம் இருக்கோணும் !'' ☆

## ஆசை



எல்லாம் ஏற்பாடாகிவிட்டது.

அவன் புறப்பட்டுவிட்டான்.

இதற்கு முன்னரும் பல தடவை போய்ப் போய் வந்தவன்தான். ஆனால் - இனி வரமாட்டான்.

வழியனுப்பிவைக்க வந்த தோழன், அவனது தோள்களை அணைத்துக் கூட்டி வந்துகொண்டிருந்தான்.

அழைத்துச்செல்லப் போகின்றவரும், அனுப்பிவைக்க வந்த தோழர்களும் அருகிலே வந்துகொண்டிருந்தார்கள்.

இருந்தாற்போல் - அவனது நடையின் வேகம் சற்றுக் குறைந்தது.

ஏனோ தெரியவில்லை - மெல்ல மெல்ல முகம் இறுகிக்கொண்டேபோனது.

கண்களில் நீர் திரையிட அவன் தயங்கினான்.

அவன் பின்னாலே திரும்பிப் பார்த்தான்.

அருகில் நின்ற தோழர்களைக் கடந்து வெகு தொலைவைப் பார்த்தான்.

விழிகளைப் பரப்பி ஏக்கத்தோடு பார்த்தான் - திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

ஏன் பார்க்கிறான் ....? எதைப் பார்க்கிறான்..... ? எங்களுக்குப் புரியவில்லை. ஆனால், ஏதோ ஒரு மாற்றம் அவனில் தெரிந்தது.

'எல்லாவற்றுக்கும் தயாராகி சந்தோசமாக வந்தவன், ஏன் திடீரென இப்படி ஆகிப் போனான்........ ?'

இவன் நினைக்கும் போதே - இவனிடமிருந்து மெல்ல விலகிக்கொண்டு -

அருகிலிருந்த காட்டுத் துண்டுக்குள் அவன் போனான்; போனவன் திரும்பி வந்தான் -

ஒரு சோர்வான நடை; நடை மட்டும்தான்.

தனது உடலில் படிந்திருந்த மண் புழுதியை தட்டிக்கொண்டு வந்தான்; தனது உதடுகளிலிருந்த புழுதியையும் -

தாயகத்துக்குக் கடைசி முத்தம் கொடுத்து வணங்கிவிட்டு அவன் வந்துகொண்டிருந்தான்.

கண்கள் சிவந்து கலங்கிப்போயிருந்தன; ஆனால், முகத்தில் தெளிவு தெரிந்தது; பார்வையில் உறுதி தெரிந்தது.

தோழர்களுக்கு மெய் சிலிர்த்தது.

இப்போது அவனைப் புரிந்துகொள்ள முடிந்ததனால் எதுவும் அவனிடம் கேட்கவில்லை.

எல்லோரிடமும் விடைபெற்று - திரும்பிப் பார்த்துக் கையசைத்து - அவன் நடந்துகொண்டிருந்தான்.

நடந்துகொண்டிருந்தவன், தோழர்களை விட்டு விலகி, சற்று எட்டத்திற்குப் போனதற்குப் பிறகு -

சட்டைப் பைக்குள்ளிருந்து எதையோ கிள்ளி எடுத்து - கைகளை விரித்து - கூட்டிச் சென்றுகொண்டிருந்தவரிடம் காட்டினானாம்...!

அவர் விக்கித்துப் போனார்.

''இது 'எங்கட மண்' ... இனிமே ஒரு நாளுமே எனக்கு இதைப் பாக்கக் கிடைக்காது...... அது தான்! ...''


www.eelamview.com

# பூநகரி வெற்றியின் உற்ற துணைவர்கள்

தாய்ப் படைத்தளமாகிய பலாலிப் பெருந்தளத்துடன் பூநகரி கூட்டுத்தளத்தை இணைத்து வைத்திருந்த 'தொப்புள் கொடி'யை அறுத்தெறியும் பணி இவர்களுடையது. எதிரியின் நாடி நரம்புகளுக்குள் புகுந்து அவனை உலுக்கி எடுத்தார்கள். பூநகரிக்குப் புது இரத்தம் பாயும் சாத்தியங்களைத் தடுத்தார்கள். அங்கு புயலை வீசச் செய்துகொண்டிருந்த புலிகளின் சேனைக்கு, தென்றலைப் பரிசாக அனுப்பிய இந்தக் கரும்புலிகள், எதிரி குந்தியிருந்த எமது நிலத்திலேயே விதையாகிப் போனார்கள்.



மேஜர் தொண்டமான்
(க . நல்லதம்பி) மட்டு.



மேஜர் கலையழகன்
(பொ . பேரின்பராசா) மட்டு.



கப்டன் சிவலோகன்
(சி . அருளானந்தம்) மட்டு.



கப்டன் மதிநிலவன்
(க . தவராசா) திருமலை.



கப்டன் . கரிகாலன்
(இ. பிரபாகரன்) திருமலை



கப்டன் ஐயனார்
(செ . ராசசேகரம்) யாழ்.



கப்டன் சிராளன்
(ஞா . குணம்) மன்னார்.



கப்டன் செந்தமிழ்நம்பி
(செ . ஜெகன்) யாழ்.



லெப் . ஜீவரஞ்சன்
(கி - முருகுப்பிள்ளை) மட்டு.



லெப். வீரமணி
(தெ . சுதாகர்) யாழ்.



லெப் . நல்லதம்பி
(த . கோகுலநாதன்) மட்டு.



லெப் . செங்கண்ணன்
(த. செந்தூர்பாண்டியன்) யாழ்.



லெப் . கண்ணன்
(ந . நேசகுலேந்திரன்) யாழ்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.eelamview.com